Foreword by Rev. Dr. Vasantharaj Albert

சிறுகுழு ஊழியம்

பயிற்சி கையேடு

டாக்டர் சி. விஜயன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சிறுகுழு ஊழியம் (பயிற்சி கையேடு)

A Handbook for Small Group Ministry

ஆசிரியர்

டாக்டர். சி. விஜயன், M.A., D.Min (USA)

Torch Bearers Fellowship

Chengalpet

All Rights reserved @ 2003

First Edition 2500 copies
Second Edition 2000 copies

Rs. 30/-

Published by

Dr.C. Vijayan
Torch Bearers Fellowship
5, Umbrella House,
J.C.K Nagar,
Chengalpet - 603 002
Email : vchinnappan@yahoo.com

Copies available also at :
Church Growth Association of India
1, 3rd st, Krishna Nagar,
T.V.K. Nagar, Chennai - 600 082.

Printed by
Meipporul Achakam
Chennai - 600 023.
044 - 2674 1526

அறிமுகம்

நான் இவ்வரிகளை எழுதும் போது இந்தியா பெரும் அதிர்ச்சிகளை சந்திக்கும் காலத்தைப் பார்க்கிறேன். மும்பையில் மக்கள் அதிகமாக நடமாடுமிடங்களில் துப்பாக்கி ஏந்திய சில தீவிரவாதிகள் மக்களை சுட்டு கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது நாடு என்றுமே அனுபவிக்காதவைகள் அன்றாட நிகழ்வுகளாக மாறிவிடுகின்றன. மக்கள் மனதில் இனமறியாத பீதி குடி கொள்ள தொடங்கிவிட்டன. கணனி அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் அகில உலகம் அனைத்திலும் ஆட்டம் கண்டுள்ளன. அத்திடீர் மாற்றம் மின்னல் வேகத்தில் வளர்ந்து வந்த பொருளாதார அடுக்குமாடி கட்டிடத்தின் அஸ்திபாரத்தை ஆட்டுகின்றன. அதன் விளைவு மக்களிடையே வேகமாக வளர்ந்து வரும் பீதி, மனித உள்ளங்களை உலுக்கிக் கொண்டிருக்கும் இந்நில நடுக்கங்களுக்கு முடிவு எப்பொழுது வருமென யாருக்கும் தெரியாத நிலை ஒரு தொடர்கதையாக உள்ளது.

இப்படிப்பட்ட உலகில், விசுவாசிகளின் பங்கு மிகவும் முக்கியம் என்ற கருத்தை தடுமாற்றமின்றி உணர்த்தும் புத்தகம் இது. விசுவாசிகள் ஓய்வுநாள் தவறாமல் பிற விசுவாசிகளுடன் இறைவனை நன்றி நிறைந்த இதயத்துடன் ஆராதிப்பதும் மட்டும் போதும் என்ற நிலை மாற வேண்டும். உலகத்தில் பல வகைப்பட்ட பணியாற்றப் படைக்கப்பட்ட ஆறு நாட்களிலும் பிற விசுவாசிகளுடன் இறைவனின் இனிய குரலை கேட்கப் பழக வேண்டும். அதற்கு உதவும் கருவிதான் நாம் உருவாக்கவேண்டிய சிறு குழுக்கள் என வலியுறுத்துகிறது இந்நூல்.

சிறு குழுக்களின் சிறப்புத் தன்மைகள். அக்குழுக்களை உருவாக்கும் எளிய முறைகள். அக்குழுக்கள், காலப்போக்கில், மறைந்து விடாமலிருக்க, அவைகளின் கூர்முனைகள் ஒடிந்து போகாமலிருக்க செய்ய வேண்டிய பணிகளுக்கு ஆலோசனைகள் பல அடங்கிய புத்தகம் இது.

அறிவர் விஜயனின் ஆழ்ந்த இறைப்பக்தியும், விசுவாசிகள் வல்லமையான ஆண்டவரின் அடியார்களாக மாற வேண்டும் என்ற ஆழ்ந்த ஒப்படைப்புடையவர். அவரின் ஆழமான கருத்துகளினால் வடிவுப்பெற்ற இந்நூல் உங்களுக்கு மிகவும் பலனளிக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. அதினிமித்தம் மகிழ்ச்சியுடன் இப்புத்தகத்தை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன்.

S. வசந்தராஜ் ஆல்பர்ட், இயக்குநர்

இந்திய திருச்சபை வளர்ச்சி ஒன்றியம்.

அன்புடன் உடன் ஊழியக்காரர்களே, விசுவாசிகளே!

கடந்த 1999ம் ஆண்டு ஒரு நாள் நான் ஜெபத்தில் தரித்திருந்தபோது தேவன் எனக்கு வெளிப்படுத்தின ஒரு ஊழியம் தான் சிறு குழு ஊழியம். இதைக் குறித்து நான் அசிரத்தையாக பல நாட்கள் இருந்தபோதும், எனக்கு கிடைத்த நண்பர்களும், வாய்ப்புகளும், வாசிக்க கிடைத்த புத்தங்களும் என்னை இவ்வூழியத்தில் அதிக ஈடுபாடு காண்பிக்க தூண்டின. இதற்காக உபவாசித்து ஊக்கமாய் ஜெபித்து தியானித்த நாட்கள் ஏராளம்.

உலகில் மிக அபரீதமாக வளர்ந்த சபைகள் அனைத்தும் இச்சிறு குழு ஊழியத்தின் மூலமாக வளர்ந்தவைகள் தான். இதை உறுதி செய்வதற்காக சென்னையிலும் மற்ற இந்தியாவின் பல நகரங்களுக்கும் நானே நேரில் சென்று பலபெரிய சபைகளின் போதகர்களோடும், அதன் சபை விசுவாசிகளோடும் கலந்துரையாடியிருக்கிறேன். வெளிநாடுகளுக்கு சென்றிருந்த போதும், அயிரக்கணக்காக விசுவாசிகளைக் கொண்ட சபைகளை நேரில் சென்றும் ஆய்வு செய்திருக்கிறேன். அச்சபைகளில் அவர்கள் பின்பற்றுகிற சில ஊழிய நடைமுறைகளையும் கேட்டறிந்திருக்கிறேன். எளிமையான சபை விசுவாசிகளால் முன்னின்று நடத்தப்படும் இச்சிறு குழு ஊழியம் என்னை வெகுவாக கவர்ந்திருக்கின்றது.

ஆனால் அதே வேளையில் இச்சிறு கையேட்டில் நான் குறிப்பிட்டிருக்கின்ற சிற குழு ஊழிய முறை நான் பார்த்து பேசின சபைகளில் பின்பற்றப்பட்ட முறை என்று கூறுவதைக்காட்டிலும், இது வேதத்தின் ஊழிய முறை என்று கூறுவது தான் பொருத்தமாயிருக்கும். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் ஆண்டவர் தன் மக்கள் மூலமாக பின்பற்றின முறைதான் இச்சிறு குழு ஊழியம்.

இது நம் இந்திய நாட்டிற்கும் இங்குள்ள சபை விசுவாசிகளுக்கும் ஏற்ற முறையாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். ஏனெனில் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று பல சபைகளைச் சார்ந்த 10000க்கும் அதிகமான

போதகர்களுக்கும், மூத்த சபை விசுவாசிகளுக்கும் இம் முறையை 250க்கும் மேற்பட்ட பயிற்சி வகுப்புகளில் பயிற்சியளித்திருக்கிறேன். நான் பயிற்றுவித்த அநேகர் இவ்வூழியம் அவர்களின் பகுதியில் நன்கு செயல்படுவதாகவும், நல்ல பலனையளிப்பதாகவும், பல நூறு விசுவாசமக்களை சபைகளில் வழி நடத்த உதவுவதாகவும் கடிதம் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் தெரியப்படுத்தி வருகின்றனர். நான் ஊழியம் செய்யும் பகுதிகளிலும், என் நண்பர்களின் சபைகளிலும் இதை செயல்படுத்தி பரிசோதனை செய்தபோது நல்ல பலனைத் தந்திருக்கின்றது. இதற்காக பல வாய்ப்புகளை கொடுத்து என்னை ஊக்குவித்த Church Growth Association of Indiaக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சிறப்பான ஊழியம் உங்கள் சபைகளிலும் சிறக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இக்கையேட்டை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். இது சபைபோதகர் மூலமாக, சபை விசுவாசிகளால் முன்னின்று செய்யப்படும் ஊழியமாகும். உங்கள் சபையும் தேவனுக்குள் வளர நீங்களும் இவ்வூழிய பயிற்சியில் கலந்து கொள்வதுடன், இம்முறையை கவனமாய்ப் பின்பற்றி தேவனுடைய சபை வளர்வதற்கு பரிசுத்த ஆவி உதவி செய்ய உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

உங்கள் உடன் ஊழியன்

சி. விஜயன்

Contents

1. **தேவன் நேசிக்கும் திருச்சபை 9**

ஆதாம் - ஏவாள் இவ்வுலக இரட்சிப்பின் பிரதிநிதி 9

இஸ்ரவேல் உலகை மீட்கும் பிரதிநிதி 10

திருச்சபை வளரவேண்டும் என தேவன் விரும்புகின்றார் 10

சபை வளர்ச்சி ஒரு கூட்டு முயற்சி 11

திருச்சபை உலக இரட்சிப்பின் தொடர் பிரதிநிதி 11

திருச்சபை வளர்ச்சியைக் தடுக்கும் சில தடைக்கற்கள் 13

ஊழியத்தில் விசுவாசிகளின் நம்பகமற்ற தன்மை 14

நவீன உலகை எதிர்கொள்ளும் ஊழிய முறைகள் இல்லை 16

2. **சிறுகுழ உழியம் என்றால் என்ன? 19**

சிறுகுழ உழியம் என்றால் என்ன? 19

ஏன் சிறுகுழ ஊழியத்தை சபைகள் பின்பற்ற வேண்டும்? 20

3. **சிறுகுழுவைக் குறித்த வேத ஆதாரங்கள் 23**

ஏதேன் தோட்டமும் சிறு குழுவும் 23

எத்திரோ விதி 23

இயேசு கிறிஸ்துவும் சிறு குழுவும் 25

ஆதித் திருச்சபையும் சிறு குழுவும் 25

4. **சிறு குழு ஊழியம் செய்ய என்ன தகுதிகள் வேண்டும்? 27**

சிறு குழு ஊழியத்தில் பங்கு பெறுபவர்களின் குணநலன்கள் 27

சிறு குழு தலைவர்களிடையே காணப்பட
வேண்டிய பொதுவான பண்புகள் 28

5. சிறு குழுக்களை ஆரம்பிப்பது எப்படி? 31
இரண்டு வகை சிறு குழுக்கள் 31
சிறு குழு ஊழியத்தின் 7 படிகள் 32
ஜெபக் குழுக்களுக்கான சில செயல் ஆலோசனைகள் 33
மனமாற்றம் ஏற்படுத்தும் குழுக்கள் & செயல்படும் விதம் 33
சிறுகுழு உடன்படிக்கை 34
சிறு குழு தலைவர்கள் பயிற்சி 34
நட்புறவு பெயர்ப்பட்டியல் 35
மறுமொழி முக்கோணம் 36
சிறு குழு தலைவர்களை தேர்ந்தெடுத்தல் 39
சாட்சி கூறுதல் 39
வேத பாடங்களை ஆயத்தம் செய்தல் 41
6. சிறு குழு ஊழியத்தில் சபை போதகரின் பங்கு 43
சிறு குழு ஊழியத்தில் போதகரின் தனிப்பட்ட முயற்சி 43
சிறு குழு ஊழிய தலைவர்களை தேர்ந்தெடுப்பது எப்படி? 45
Fast Principle 46
சிறு குழு தலைவர்களின் ஊழிய பொறுப்புகள் 49
சிறு குழு உதவி தலைவரின் ஊழிய பொறுப்புகள் 50
சிறு குழு கூட்டங்கள் 51
7. சிறு குழு தொடர் ஊழியங்கள் 55
சிறு குழு ஊழியத்தின் நான்கு படிகள் 55
8. சிறு குழுவின் பெருக்கம் 59
ஞானஸ்நானத்திற்கு முன்பு 59
ஞனாஸ்நானத்திற்கு பின்பு 59
ஊழியப்பயிற்சி 59
தலைமைத்துவ பயிற்சி 60
9. முடிவுரை 60
10. இணைப்புகள் 61

Torch Bearer Fellowship

வெளியீடுகள்

1.	Small Group Ministry (English)	Rs. 80.00
2.	Images of the Pastor (English)	Rs. 110.00
3.	The Constitution for Modern Man	Rs. 80.00
4.	Hand Book for small Group Ministry (Tamil)	Rs. 30.00

Nalavalvu (Tamil) Monthly Health Magazine

Torch Bearer Fellowship நிறுவனம்,
அழைப்பின் பேரில் சிறுகுழு ஊழியத்தைக் குறித்தும்,
இவ்வூழியத்தை உங்கள் சபைகளில் ஆரம்பிப்பது
எப்படி என்பதையும் எளிய முறையில்
படக்காட்சிகளுடன்
கருத்தரங்கு மற்றும் வகுப்புகளை
டாக்டர் சி. விஜயன் அவர்கள் போதிப்பார்கள்.

மேலும் விபரங்கள் அறிய:

டாக்டர். சி. விஜயன்

போன்: 90472 95646, 99409 79535

1 தேவன் நேசிக்கும் திருச்சபை

தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அந்த சிருஷ்டிப்பின் சிகரமாக, அவருடைய சாயலில் ஆதாம் ஏவாளைப் படைத்து அது மிகவும் நல்லது என்று கண்டார். தேவன் மனித சமுதாயத்தை மட்டுமல்ல, உலகிலுள்ள அனைத்து சிருஷ்டிகளையும் மிகவும் நேசித்தார். ஆனால் மனிதனோ தேவனுடைய அன்பை சந்தேகித்தவனாக சாத்தானுடைய வார்த்தையைக் கேட்டு மறுதலித்துதினிமித்தம் பாவியானான். ஆதாமும், ஏவாளும் தேவனுடைய கோபத்துக்கு பயந்து ஓடி ஒளிந்து கொண்டாலும், பரலோக தேவன் விழுந்து போன மனித சமுதாயத்தை தேடி வந்தார்.

ஆதாம் - ஏவாள் இவ்வுலக இரட்சிப்பின் பிரதிநிதி

தேவன் ஆதாம் ஏவாளை படைத்து அவர்களை இவ்வுலகில் அவரின் அன்பையும், குணாதிசங்களையும் பிரதிபலிக்கும் பிரதிநிதிகளாக ஏற்படுத்தினார். ஆனால் அவர்கள் பாவம் செய்து தேவ சித்தத்தை நிறைவேற்றாமல் போனது பரலோகத்தில் பெரும் துக்கத்தை கொண்டு வந்தது. தேவ கட்டளைக்கு கீழ்படியாத மனித சமுதாயம் தேவனுடைய சமூகத்திலிருந்து நித்தியமாக பிரிவினையை சந்திக்க நேர்ந்த சூழ்நிலை உண்மையாயினும், தேவன் கிறிஸ்து மூலமாக மறுபடியும் இழந்துபோன உலகை தேவ சமூகத்துக்குள் கொண்டு வர விரும்பினார் (2 கொரிந்தியர் 5:19).

தேவ நீதியும், அதன் சட்டங்களும் பரிசுத்தமானதால், கிறிஸ்து ஒருவர் தான் மனித சமுதாயத்தை மீட்டெடுக்கும் பாவநிவாரண பலியாக வந்து மீட்க முடியும். ஆதாமுக்கு ஏதேன் தோட்டத்தில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தமாகிய மெய்யான தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தம் (ஆதியாகமம் 3:15) சிந்தப்பட்டு கல்வாரி சிலுவையில் மனித இரட்சிப்பு கிறிஸ்து மூலமாக முழுமையாக நிறைவேறியது. இம்மீட்பு ஆதாம் முதல் கிறிஸ்து வரும் வரை வாழ்ந்த மக்களுக்கு மட்டுமின்றி வரப்போகும் சந்ததியும் இதே இரத்தத்தினால் மீட்கப்பட வேண்டும் என்பது தான் தேவ இரட்சிப்பின் திட்டம்.

இஸ்ரவேல் உலகை மீட்கும் பிரதிநிதி

பாவத்தினாலும் அதன் விளைவுகளாலும் நித்திய மரணத்தினால் பீடிக்கப்பட்டிருந்த இப்பூவுலக மனித சமுதாயத்தை கிறிஸ்து சிலுவையில் மீட்டெடுத்த நற்செய்தி, உலகில் எல்லா திக்குகளிலும் அறிவிக்கப்பட்டு மனிதன் விடுதலை அடைய வேண்டுமென்பது தேவனின் சித்தம். இச்செய்தி உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் எட்டப்பட வேண்டும் என்று விரும்பிய தேவன் முதலாவதாக இஸ்ரவேல் கோத்திரத்தை தெரிந்தெடுத்தார். ஆபிரகாம் தொடங்கி கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்த காலம் வரை இஸ்ரவேலர் என்ற கோத்திரம் தேவனுக்கு பிரதிநிதியாக இருந்து, கிறிஸ்து ஏதேனில் அறிவித்த இந்த இரட்சிப்பின் திட்டத்தை உலகம் முழுவதும் அறிவிக்க வேண்டுமென எதிர்பார்த்தார். இம்முயற்சி எல்லா காலத்திலும், எல்லாராலும் செயல்படுத்தப்பட வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தை பயிற்சி சாலையாக வைத்து அதன் சடங்காச்சார ஆராதனைகளின் மூலம் இரட்சிப்பை போதித்தார். ஆனால் இந்த சமுதாயம் இவ்வூழியத்தை செய்ய தவறியதோடு மட்டுமின்றி இவ்வூழியத்தை தாழ்மையோடு நிறைவேற்ற வந்த இயேசு கிறிஸ்துவையும் சிலுவையில் அறைந்தனர். ஆயினும் பரலோகம் சுவிசேஷ அறிவிப்பின் நம்பிக்கையை முழுமையாக விட்டுவிடவில்லை.

திருச்சபை வளரவேண்டும் என தேவன் விரும்புகின்றார்

சபைக்கு இரண்டு முக்கிய பொறுப்புகளுண்டு: முதலாவது ஆண்டவருடைய ஊழிய கட்டளையை நிறைவேற்ற வேண்டும் (மத்தேயு 28:19-20). இரண்டாவதாக, சபையில் உள்ள விசுவாசிகளை சீஷர்களாக உருவாக்குவது (2 தீமோத்தேயு 2:2). கிறிஸ்துவால் அஸ்திபாரமிடப்பட்ட இத்திருச்சபை வளரவேண்டும் என தேவன் எதிர்பார்க்கின்றார். இந்நவீன காலத்தில் இந்த முயற்சி மிகவும் கடினமானதாக இருப்பினும் பரிசுத்த ஆவியானவரோடு நாம் இணைந்து செயல்பட்டால் இந்த முயற்சி எளிதானதே.

மத்தேயு 28:19-20



2 தீமோத்தேயு 2:2



சபை வளர்ச்சி ஒரு கூட்டு முயற்சி

மற்றொரு முக்கிய காரியத்தை நமது சபை வளர்ச்சி முயற்சியில் கவனத்தில் கொள்ள வேண்டும். சபை வளர்ச்சி என்பது கூட்டு முயற்சி. இது போதகரால் மாத்திரமோ, அல்லது பல பட்டங்களைப் பெற்ற சபைத் தலைவர்களாலே மாத்திரம் செய்து விட முடியாது. பவுலின் கூற்றைக் கேளுங்கள். "நான் நாட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார். அப்படியிருக்க நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர் பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்." (1 கொரிந்தியர் 3:6-7) ஆகவே சபை வளர்ச்சி என்பது போதகர், சபை தலைவர்கள், மற்றும் தேவனால் இரட்சிக்கப்பட்ட சபை மக்களுடன் இணைந்து செய்யப்படவேண்டும். அதுதான் சபை பெருக்கத்தை கொண்டு வரும்.

வேதம் கூறுவதுபோல சபை வளர்ச்சி என்பது மனித அறிவினாலோ, அவனது செல்வாக்கினாலோ, பெலத்தினாலோ சாத்தியப்படக் கூடியது அல்ல. ஆனால் ஆவியினால் எல்லாம் ஆகும் (சகரியா 4:6) .

சபையைக் குறித்து வேதத்தில் பல உவமைகள் சொல்லப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு சபையை தோட்டம், ஆலயம், ராணுவம் என்று கிட்டத்தட்ட 27 உவமைகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவைகள் அனைத்தும் சபையைக் குறித்து விளக்கப்பட்டவை என்று கூறுவதை காட்டிலும், சபையின் பலதரப்பட்ட ஊழியங்களை விவரிக்கின்றன என்று கூறுவதே சரியாகும்.

சபை கிறிஸ்துவின் சரீரம். அது உயிருள்ள அணுக்களை (cells) கொண்டது. அது கண்டிப்பாக வளரவேண்டும். ஏனெனில் சரீரத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு அணுக்களுக்கும் உயிருண்டு.

திருச்சபை உலக இரட்சிப்பின் தொடர் பிரதிநிதி

கிறிஸ்துவானவர் பரமேறுமுன்பு இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற சபையை ஏற்படுத்தினார். "இந்த கல்லின்மேல் சபையை கட்டுவேன்" என்று கூறி, அத்துடன் பாதாளத்தின் திறவுகோல்கள் அதனை மேற்கொள்ளவதில்லை என்று அதற்குரிய பாதுகாப்பை குறித்தும் விளக்கிவைத்தார். (மத்தேயு 16:18). இச்சபையானது தன் ஊழியத்தை பவுல் அப்போஸ்தலன் கூறும் வண்ணம், அப்போஸ்தலர்களாலும் தீர்க்கதரிசிகளாலும் இன்னும் கிறிஸ்துவை, இரட்சகராக ஏற்றுக் கொண்ட நம் அனைவராலும் நிறைவேற்றப்பட வேண்டும்

என விரும்புகின்றார் (எபேசியர் 2:21-22). நீங்களும் நானும் கிறிஸ்து கூறிய அந்த பிரதான கட்டளையாகிய உலகமனைத்திற்கும் சுவிசேஷ நற்செய்தியை அறிவித்து சீஷராக்குகின்ற (மத்தேயு 28:19-20) ஊழிய பணியை நிறைவேற்ற தேவன் அன்புடன் அழைக்கிறார். நீங்களும் நானும் கிறிஸ்து கட்டின இத்திருச்சபை வளர்வதற்கு ஏதேனும் செய்யவேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் சபையில் எழுப்புதல்களை ஒவ்வொரு கால கட்டங்களிலும் ஏற்படுத்தி சபையை அவர் விரும்பும் வண்ணமாக வளர்த்து வருகின்றார். பலவித உபத்திரவங்களின் ஊடே தேவன் ஆதித்திருச்சபையை வளர்ச்சியடையச் செய்தார். கிறிஸ்துவைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த திருச்சபை 1-12-70-120-3000-5000 என்று வளர்ந்து முதலாம் நூற்றாண்டு முடிவிற்குள் 6 லட்சம் கிறிஸ்தவர்களைக் கொண்ட பெரிய சபையாக வளர்ச்சி பெற்றது. அனுதினமும் ஜனங்கள் சபையில் சேர்க்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 2:47).

சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு வேதம் விசுவாசிகள் கைகளில் இருந்து திருச்சபை தலைவர்களால் பிடுங்கப்பட்டு, இரட்சிப்பின் சத்தியம் முழுவதுமாக மறைக்கப்பட்ட காலகட்டத்தில் தான் மார்ட்டீன் லூத்தர் என்ற சமய சீர்த்திருத்தவாதியை தேவன் எழுப்பினார். 16 ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட இச்சீர்த்திருத்தத்தினால் வேதமே கிறிஸ்தவ வாழ்வின் வழி காட்டி, மையம், இலக்கணம் என்ற சத்தியம் வலியுறுத்தப்பட்டதுடன், "நீதிமான் கிரியையினால் அல்ல, விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்படுவான்" என்ற மறைக்கப்பட்ட சத்தியம் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் 17 ஆம் நூற்றாண்டில் சமய சீர்த்திருத்த ஒளி மங்கி, ஆவிக்குரிய ஏழ்மை (Spiritual Poverty) தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையிலும் சபையிலும் காணப்பட்டபோது பக்தி சீர்த்திருத்தம் (Pietism) என்ற எழுச்சி திருச்சபையில் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் 21 ஆம் நூற்றாண்டில் நண்பர்கள் அல்லது உறவினர்கள் ஊழியம் என்று ஸ்தல சபைகளில் மறுமலர்ச்சி தோன்றியது. இதன்படி ஊழியமானது உறவுக்கும், ஜெபத்திற்கும், சீஷத்துவ வளர்ச்சிக்கும் மற்றும் சபை தலைவர்கள் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதன்படி சத்தியத்தை ஒரு நபருக்க அறிவிக்கும் முன் நாம் சரியான உறவை ஏற்படுத்தி, பின்பு சத்தியத்தை கூறுகின்ற முறைதான் இந்த "ஸ்தல சபையின் மறுமலர்ச்சி".

இதனடிப்படையில் 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்தல சபைகளில் ஊழியமானது உற்சாகப்படுத்தப்பட்டு, சபையார் மூலம் நடத்தப்படுகின்ற இவ்வூழிய முறையைத்தான் "சிறுகுழு ஊழியம்" என்று அழைக்கின்றனர்.

இந்த ஊழியமுறை திருச்சபை விசுவாசிகளால் முன்னின்று நடத்தப்படுகின்ற ஊழியமுறையாகும். இது உலகின் பல சபைகளை மிகப்பெரிய சபைகளாக வளர்க்க வழி வகுத்திருக்கின்றது.

திருச்சபை வளர்ச்சியைக் தடுக்கும் சில தடைக்கற்கள்

21ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நமக்கு கிறிஸ்துவின் பாவ மன்னிப்பின் செய்தியை மக்களுக்கு சுமந்து செல்வதில் ஏராளமான சிரமங்கள் உள்ளன. இவற்றை தடைக்கற்கள் எனலாம். அவைகளில் சில:

1. மக்கள் தொகை பெருக்கம்

உலக மக்கள் தொகை பெருக்கத்தை நாம் உற்றுநோக்கும்போது நாம் தற்போது செய்துகொண்டிருக்கின்ற ஊழியம் எல்லா மக்களையும் சென்றடைய முடியுமா என்ற கேள்வி நம் மனதில் எழும்புகின்றது. இந்திய மக்கள் தொகை 102 கோடிக்கு மேல்! உலக மக்கள் தொகைப் பெருக்கத்தின் வேகத்தைப் பாருங்கள்! கிறிஸ்து காலத்திலிருந்து மார்ட்டீன் லூத்தர் காலம்வரை 1500 ஆண்டுகளில் மக்கள் தொகை இரண்டு மடங்காக 6 பருகின. கி.பி.1500 முதல் இடைப்பட்ட 1800 வரை 300 ஆண்டுகளில் மறுபடியும் உலக மக்கள் தொகை இரட்டிப்பானது. மீண்டும் 1800 முதல் 1930 வரை இடைப்பட்ட 130 ஆண்டுகளில் மக்கள் தொகை மறுபடியும் இரட்டிப்பானது. 1930 முதல் 2000 வரை இடைப்பட்ட 70 ஆண்டுகளில் மறுபடியும் மக்கள் தொகை இரட்டிப்பானது. 2025ல் அதாவது இன்னும் 25 ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிறிஸ்து கூறும்போது, "அறுப்பு மிகுதி" வேலை ஆட்களோ கொஞ்சம் என்றார். அத்துடன் அறுப்புக்கு எஜமான் வேலை ஆட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள் என்றும் கூறினார் (மத்தேயு 9:37-38)

2. திருச்சபைகளில் தரிசனமற்ற நிலை

தேவன் திருச்சபையை ஊழிய மையமாகவும், அதன் அங்கத்தினர்கள் அனைவரும் ஊழியத்தை நிறைவேற்றும் பணியாட்களாகவும் இருக்க வேண்டும் என விரும்புகின்றார். ஆனால் எசேக்கியல் 37 ஆம் அதிகாரத்தில் கூறும் வண்ணம் இக்காலங்களில் உலர்ந்த எலும்புகளாக சபைகள் காட்சியளிக்கின்றன. சபை மக்களில் 50 சதவீதம் பேர் பார்வையாளர்களாக

(Spectators), பெரும்பாலும் சபை ஆராதனையில் கலந்து கொள்கின்றவர்களாக இருக்கின்றனர். சபை மக்களில் மேலும் பலர் பல ஆண்டுகள் சத்தியத்தை கேட்கின்றவர்களாகவே இருக்க விரும்புகின்றனர். கிறிஸ்துவுக்குள் வளர்ந்து, சீஷர்களாக, போதகரோடு தேவனுடைய ஊழியத்தை செய்ய உலக ஆராய்ச்சியின் படி 10 சதவீதம் பேர் தான் தயாராயுள்ளனர். இந்த 10 சதவீதம் பேர் போதகரோடு உழைத்து ஈட்டுகின்ற முன்னேற்றம் தான் பல நேரங்களில் முழு சபையின் வளர்ச்சியாக சித்தரிக்கப்படுகின்றது. சபையின் ஊழியமாயினும், வார மத்திப ஜெப கூட்டங்களாயினும் இந்த 10 சதவீதம் பேர்தான் சபையில் போதகரோடு கலந்து கொள்கின்றனர்.

சமீபத்திய ஆராய்ச்சியில் சென்னையில் 50 சதவீதம் வாலிபர்கள் பாரம்பரிய சபைகளுக்கு Denominational Churches செல்வதில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு பாரம்பரிய சபைகளின் பாட்டுகளும், ஆராதனை முறைகளும் எழுச்சியாக இல்லை. அதனால் வாலிபர்கள் எழுச்சியான ஆராதனைகளையும் உற்சாகமான பாடல்களையும் ஆராதனைகளில் பயன்படுத்துகின்ற சுயாதீன (Independent) சபைகளுக்கு செல்வதாக கூறுகின்றனர். வாலிபர்களை கவருகின்ற வகையில் சமுதாயத்தில் காணப்படும் கேளிக்கைகளும், வாழ்வின் சவால்களும் வாலிபர்களை சபை வாழ்விலிருந்து பிரித்துவருவதையும் அவர்கள் ஊழியத்திற்கு ஒத்துழைப்பபை தர இயலாத நிலைமைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. பல நேரங்களில் சபையின் மூத்த விசுவாசிகள் சபை மக்களுக்கு கொடுக்கின்ற அங்கீகாரத்தை காட்டிலும், ஆலயக் கட்டிடங்களுக்கும், அர்த்தமற்ற ஆராதனை முறைமைகளுக்கும் தான் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

3. ஊழியத்தில் விசுவாசிகளின் நம்பகமற்ற தன்மை

உலகில் நடைபெற்ற எல்லா சமய சீர்த்திருத்தங்களும், சபை வளர்ச்சியும் அதன் எழுச்சியும் மேல் மட்டத்திலிருந்து (Church hierarchy) எழும்பிய தாகவோ, அது பெரிய மாற்றத்தை சபைகளில் கொண்டு வந்ததாகவோ எந்தவித சரித்திரமுமில்லை. அதே வேளையில் எப்போதெல்லாம் சபை விசுவாசிகள் மத்தியில் மற்றும் ஸ்தல சபைகளில் சீர்திருத்த கருத்துக்கள் வலுப்பெற்றதோ அப்போதெல்லாம் சபைகளில் சீர்திருத்தம் முழு வெற்றியை அடைந்திருக்கின்றது.

மேலும், சபை விசுவாசிகள் திருச்சபையின் ஆத்தும ஆதாய ஊழியத்தில் பங்கு பெறாததற்கு பல காரணங்கள் உண்டு.

அ. உலகப்பிரகாரமான இச்சை

அதிக நேரம் செலவழித்து எவ்வழியிலாயினும் பொருள் ஈட்டி உலகில் வாழும் அஞ்ஞான மக்களுக்கு ஈடாக வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலான விசுவாசிகள் மனதில் குடி கொண்டிருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தகைய ஆசைகள் தேவனை தேடுவதற்கும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு எடுத்துச் செல்லவும் இடம் கொடுப்பதில்லை. வாழ்வின் பெரும்பாலான நேரம் குடும்பம், அலுவலகம், ஓய்வு, பொழுதுபோக்கு என்று கழிக்கப்பட்டு, ஊழியத்தை இரண்டாம் இடத்திற்கு தள்ளிவிடுகின்றனர். இதனால் சபைவளர்ச்சிக்குள் அல்லது ஊழியத்திற்கே நேரம் ஒதுக்க முடிவதில்லை.

ஆ. சபையின் அமைப்பு முறை

திருச்சபைக்கும் அதன் வளர்ச்சிக்கும் அமைப்பு முறை (Organisational Structure) தேவை தான். ஆனால் அவ்வமைப்பு முறையே பலநேரங்களில் சபை விசுவாசிகள் இயற்கையான சாட்சியின் ஊழியம் (Spantaneous Witnessing) செய்வதற்கு இடையூறாக இருப்பதை அநேக நேரம் உணருகின்றோம். சபை அமைப்பின் மூலமாக ஊழியத் திட்டங்களை, அமைப்பின் கட்டளைக்கேற்ப, அமைப்புக்க அடங்கித்தான் நிறைவேற்ற வேண்டுமென்று சபை மக்களுக்கு போதிக்கப்படுகின்றது. வலியுறுத்தவும்படுகின்றது.

இ. ஊழியத்தில் விசுவாசிகளில் பங்கை வேத அடிப்படையில் போதிக்கப்படுவதில்லை

உலக சரித்திரத்தில் நான்காம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை வேதம் விசுவாசிகளின் கைகளில் இருந்து பிடுங்கப்பட்டு, சபை தலைவர்களின் வேதத்திற்கு ஒவ்வாத அநேக போதனைகள், தத்துவங்கள் சபை மக்களிடம் திணிக்கப்பட்டன. இதனிமித்தம் சபையில் விசுவாசிகள் சபையின் ஊழியத்திலிருந்து பிரிக்கப்பட்டனர். சபை மக்கள் அனைவரும் தேவ ஜனமாக (LAOS) இருந்து ஊழியம் செய்த நிலை மாறி போதகர் (KLERIOS) என்றும், சபையில் தொழுதுகொள்ளவரும் போதகரல்லாத மக்கள் (LAOS) என்று பிரிக்கப்பட்டது. போதகர் உயர்ந்த குடியினர் போலவும், ஊழியத்தை செய்ய இவர்களுக்கு மாத்திரம் தான் தேவனும், சபையும் அங்கிகாரம் அளித்தது போலவும் சித்தரிக்கப்பட்டது. விசுவாசிகளின் கடமைகள் மூன்று மட்டுமே என

போதிக்கப்பட்டது: 1. போதகருக்காக ஜெபிக்க வேண்டும், 2. சபையில் எல்லா ஆராதனைகளிலும் கலந்து கொள்ள வேண்டும், 3. உண்மையும் உத்தமுமாக காணிக்கை, தசம பாகம் செலுத்தவேண்டும். மேற்குறிப்பிட்ட மூன்றை தவிர விசுவாசிகள் வேறொன்றுக்கும் சபைக்கு கடனாளிகள் அல்ல என்ற எண்ணம் போதிக்கப்பட்டு அதுவே அவர்களின் மனதில் வேரூன்றி நாளடைவில் அது புரையோடியும் போனது.

மார்ட்டீன் லூத்தர் என்ற தத்துவ ஞானி, பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே "விசுவாசிகளின் ஆசாரியத்துவம்" (Priesthood of Belivers) என்று விசுவாசி களின் ஊழிய அங்கீகாரத்தைக் குறித்து வலியுறுத்தினாலும் இன்றும் பல சபைகள் விசுவாசிகள் ஊழியத்தில் ஈடுபடுவதை உற்சாகப்படுத்துவதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஆராய்ச்சியில் சபைக்கு மக்கள் எப்படி சத்தியத்தை ஏற்றுக்கொண்டு யார் மூலமாக வருகின்றனர் என்ற கேள்விக்கு கிடைத்த பதிலைப்பாருங்கள்!

✶ படை முயற்சி கூட்டங்கள் (Crusades)	-	0.5 சதவீதம்
✶ விசேஷித்த தேவைகள் (Felt Needs)	-	1 - 2சதவீதம்
✶ வீடு சந்திப்பு (Visitation)	-	2 - 3 சதவீதம்
✶ சபை நிகழ்ச்சிகள்(Church Programmes)	-	4 - 5 சதவீதம்
✶ ஓய்வு நாள் பாடம் (Sabbath School)	-	5 - 6சதவீதம்
✶ போதகர் (Pastors)	-	5 - 6 சதவீதம்
✶ நண்பர்கள் / உறவினர்கள் (Friends / Relatives)	-	75 - 90 சதவீதம்

உண்மை இப்படியிருக்க நமது சபைகள் விசுவாசிகள் அதிக அளவில் ஊழியத்தில் ஈடுபடுத்த திட்டங்களை தீட்டுவது அவசரமும் அவசியமும் அல்லவா?

4. நவீன உலகை எதிர்கொள்ளும் ஊழிய முறைகள் இல்லை

இந்திய நாடு உலகின் மற்ற நாடுகளைப் போல ஒரே இனத்தால் அமைக்கப்பட்ட சமுதாயமல்ல. இந்திய நாட்டில் 4635 ஜனக்கூட்டங்களும் (People Groups), 6400 ஜாதிப்பிரிவுகளும் (Castes), மொழிகளும், நாகரீக வாசனையே அல்லாத நூற்றுக்கணக்கான ஆதிவாசிகளின் இனங்களும் உள்ளன. இந்திய கலாச்சாரத்தை அறிந்துணர்ந்த நாம் ஒவ்வொருவரும்,

அவர்கள் உடை, உணவு, சமய பிரார்த்தனைகள், குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்திலுமே ஒன்றுடன் ஒன்று கலவாததுவர்கள் என்று அறிந்திருக்கிறோம்.

இத்தகைய சமுதாயத்தைச் சென்றடையக்கூடிய விதத்தில் சுவிசேஷத்தை போதிப்பது எப்படி? ஒரு சமுதாயத்தில் வெற்றியைக் கொடுக்கக்கூடிய ஒரு ஊழியத்திட்டம், மற்றொரு சமுதாயத்தில் நிச்சயமாக எதிர்பார்க்கக்கூடிய பலனைக் கொடுக்கமுடியாது. நம் முன்னோர்கள் வெற்றிகரமாக பயன்படுத்திய சில ஊழிய முறைகள் நவீன கம்ப்யூட்டர் யுகத்தில் வெற்றியைக் கொடுக்குமா என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். அதே நேரத்தில் மேலை நாடுகளில் மிகப்பெரிய வெற்றியை ஈட்டுத்தந்த பல ஊழியத்திட்டங்கள் நம் இந்திய மண்ணில் அதிக பலனைக் கொடுக்காததின் காரணம் நம் இந்திய நாடு மொழியால், இனத்தால், ஜாதியால் துண்டாடப்பட்டு கிடக்கின்றது.

ஆகவே, இந்திய நாட்டு கலாச்சாரத்திற்கும், பொருளாதார வசதி வாய்ப்புகளுக்கும், மக்களின் அடிப்படை உணர்வுகளுக்கும் ஏற்றவிதத்தில் ஒருஊழியத்திட்டம் (Strategy) உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் அப்புதிய முயற்சி வேதத்தின் அடிப்படை சித்தாந்தங்களை பிரதிபலிப்பதாகவும் இருக்கவேண்டும்.

உலகில் 1970 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு இதுநாள் வரை கிறிஸ்தவ சபைகளில் பின்பற்றி வந்த ஊழியமுறைகள் எதிர்பார்த்த பலனைத்தராத சூழ்நிலையில் வேதத்தை கற்றறிந்த ஞானிகளும், சபை வளர்ச்சி குறித்த ஆராய்ச்சி செய்பவர்களும். "சிறு குழு ஊழியம்" என்ற முறையை அறிமுகப்படுத்தினர். இதன் பிரகாரம் பல உண்மைகள் திருச்சபையின் ஊழியக்காரர்களுக்கு உணர்த்தப்பட்டது அதன்படி:

- வேத பாடங்கள் மாத்திரமே ஒரு ஆத்துமாவை மனந்திருந்த செய்யமுடியாது
- பிரசங்கங்களால் மாத்திரமே ஒரு மனுஷன் சீஷனாக மாற முடியாது
- சபை நிகழ்ச்சிகள் மாத்திரமே மக்களை சபைக்குள் ஈர்க்க முடியாது
- மேற்குறிப்பிட்ட இவை அனைத்தும் சபை வளர்ச்சிக்கு மிக அவசியமெனினும் அவைகள் நல்ல உறவுடன் இணைக்காமல் செய்யும் போது அதிக பலனைத் தராது. விசுவாசிகளை சமுதாய ஐக்கியத்துக் குள் கொண்டுவரும் ஊழிய முறை ஆயிரக்கணக்கான மக்களை திருச்சபைக்குள் வழிநடத்தும் என நம்புகின்றனர்.

இச்சிறு குழு ஊழிய முறை தொன்றுதொட்டு, ஆதித்திருச்சபையாலும் நம் முன்னோர்களாலும் பின்பற்றி வந்த ஊழிய முறைகளைவிட அதிக வித்தியாச மானதல்ல

- இதன் ஊழியத் தொடக்கம் ஸ்தல திருச்சபையில் (Local Church) ஆரம்பிக்கின்றது.
- இதன் ஊழிய வழிமுறைகள் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது.
- இதன் வழிகாட்டிகளும் இவ்வூழியத்தை தலைமை தாங்கி நடத்தும் தலைவர்களும் திருச்சபை விசுவாசிகளே!

இன்னொரு விதத்தில் கூறுவோமானால், இவ்வூழியம் சத்தியத்தை ஒருவருக்கு பகிர்ந்து கொள்ளுமுன் அவருடைய சரீர, ஆத்துமத் தேவைகளை சந்தித்து, தோழனாக்கிய பிறகு, சத்தியத்தையும் வேத கோட்பாடுகளையும் போதிக்கின்ற முறையாகும். சகோதர சமுதாய ஐக்கியத்தை பெலப்படுத்துவதான் இவ்வூழியத்தின் முதன்மையான முயற்சியாகும்.

சபையின் அமைப்பு முறையை பெலப்படுத்துவது மாத்திரம் இவ்வூழியத்தின் நோக்கமல்ல. வீடுகளில் சிறு குழுக்களாக கூடி, அதை ஐக்கியத் குழுக்களாக மாற்றி, அதில் பங்குபெறும் அங்கத்தினர்களை கிறிஸ்துவின் சீஷர்களாக மாற்றுவதுதான் இவ்வூழியத்தின் பிரதான இலக்கு

ELTON TRUE என்பவர் YOKE OF CHRIST என்ற புத்தகத்தில் கூறும்போது, "ஆதி திருச்சபையில் கட்டிடங்கள் இல்லை. சபையின் உயரிய அமைப்பு முறை இல்லை. வேதாகம கல்லூரிகள் இல்லை, பாடல் குழுக்கள் இல்லை, ஆதித்திருச்சபையில் கட்டிடங்கள் இல்லை, சபையின் உயரிய அமைப்பு இல்லை, வேதாகம கல்லூரிகள் இல்லை, பாடல் குழு இல்லை, ஆனால் சிறிய குழுக்களாக விசுவாசிகள் வீடுகளில் கூடி ஐக்கியப்பட்டு ஊழியம் செய்தனர். இதன் மூலம் சபை வெகுவாக மக்களை கவர்ந்தது - வளர்ச்சி அடைந்தது" என்கின்றார்.

2

சிறுகுழு உழியம் என்றால் என்ன?

சிறுகுழு உழியம் என்றால் என்ன?

"ஒரு பகுதியில் உள்ள கிறிஸ்துவை அறியாத மக்களை சந்தித்து, நண்பர்களாக்கி வீடுகளில் வாரம் ஒருமுறை 3-12 பேர்கொண்ட சிறு குழுக்களாக கூடி ஜெபித்தும், வேதம் வாசித்தும், துதித்தும், சாட்சி பகிர்ந்தும், சீஷத்துவ வளர்ச்சியில் ஊக்கப்படுத்தி ஐக்கியத்தை பெலப்படுத்துவதுதான் சிறுகுழு வாகும்."

இவ்வூழியம் உலகில் வளர்ச்சி அடைந்த நாடாயினும், வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற நாடாயினும், வளர்ச்சி அடையாத நாடாயினும் பெரு வாரியாக மக்களை சத்தியத்திற்குள் வழிநடத்த நல்லதொரு வழிமுறையாக காணப்படுகின்றது.

அமெரிக்காவிலுள்ள சாடில் பேக் கம்யூனிட்டி சபை 8 ஆண்டுகளில் 2 அங்கத்தினர்களிலிருந்து 6,000 விசுவாசிகளைக் கொண்ட சபையாக இச்சிறு குழு ஊழியத்தின் மூலம் வளர்ச்சியடைந்திருக்கின்றது. ஆப்பிரிக்காவின் பிராட்டஸ்ட்டன்ட் சபை 1985ல் 350 விசுவாசிகளை மாத்திரம் கொண்டிருந்தது. ஆனால் இச்சிறுகுழு ஊழியத்தின் மூலம் 1989ம் ஆண்டு 82,000 பேர் கொண்ட பெரிய சபையாக மாறியது. சிங்கப்பூரிலுள்ள Faith Community சபை பிப்ரவரி 89ல் மூவாயிரம் பேராக இருந்தது. ஆனால் சிறுகுழு ஊழியத்தின் மூலம் ஜுலை 89ல் நான்காயிரமாக வளர்ச்சியடைந்தது. சென்னையிலுள்ள New Life Assembly of God 1993ல் 2500 அங்கத்தினரிலி ருந்து 2002ல் சிறுகுழு ஊழியத்தின் மூலம் 20,000 ஆக வளர்ச்சியடைந் துள்ளது. சென்னையிலுள்ள மற்றொரு சபையான Calvary Community Church 200லிருந்து 850 ஆக ஒரு வருடத்தில் சிறு குழு ஊழியத்தின் மூலம் வளர்ச்சியடைந்துள்ளது. தென் கொரியாவிலுள்ள சியோல் என்ற இடத்தில் உள்ள டேவிட் பால்யங்கி சோவின் சபையில் 8 லட்சம் அங்கத்தினர்களை

சிறுகுழு ஊழியத்தின் மூலம் சபைக்கு கொண்டு வந்து உலகிலேயே பெரிய சபையை ஏற்படுத்த முடிந்தது. உலகில் உள்ள 10 பெரிய சபைகள் இச்சிறு ஊழியத்தின் மூலம் வளர்ந்தவை தான் என்று சபை சரித்திர ஆராய்ச்சி கூறுகின்றது.

சமீப காலங்களில் தமிழக, இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களினால் சபைகள் பெரிய அளவில் பொதுக்கூட்டங்களை நடத்தி மக்களை கிறிஸ்துவினிடம் வழி நடத்த முடியவில்லை. சட்டங்களினாலும் மற்ற சமுதாய பிரச்சனைகளினாலும் இச்சிறுகுழு ஊழியம் சபை வளர்ச்சியில் எந்த பின்னடைவையும் ஏற்படுத்தாது.

ஏன் சிறுகுழு ஊழியத்தை சபைகள் பின்பற்ற வேண்டும்?

1. **சிறுகுழு ஊழியம் சபையை சமவிகிதத்தில் (Exponential) வளர்க்கும்** எந்த அளவிற்கு சபை விசுவாசிகள் ஊழியத்தில் பங்குபெற ஊக்குவிக்கப்படுகின்றார்களோ அதே விகிதத்தில் சீஷத்துவ வளர்ச்சி தலைவர்கள் பெருக்கம், ஞானஸ்நானம் பெருகும்.

2. **சிறுகுழு ஊழியத்தில் அதிக பணச்செலவில்லை.** சிறுகுழு ஊழியம் 1 கிலோமீட்டர் சுற்றளவில் ஊக்குவிக்கப்படுவதால் அதிகப் பிரயாண செலவு அல்லது உணவு செலவு ஏற்படுவது இல்லை. ஆடம்பரமில்லாத இவ்வூழியத்தினால் இந்திய நாட்டின் பொருளாதாரத்திற்கும், சபையின் பொருளாதாரத்திற்கும் எவ்வித இடையூறும் இன்றி ஊழியத்தை செய்ய முடியும். ஊழியம் என்றாலே பெரிய அரங்கு, தோரணங்கள், அலங்கார மின் விளக்குக்கள் ஆயிரக்கணக்கானோர் கூடுகை தான் என்ற உணர்வு ஊழியர்கள் மத்தியிலே அதிகம் காணப்படுகின்றது. இதனிமித்தம் ஊழியர்களின் பிரயாணம் மற்றும் தங்கும் செலவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. இதுதான் ஊழிய நாகரீகம் என்று கூட கற்பிக்கப்படுகின்றது. ஆனால் மிகப்பெரிய மனமாற்றத் தையும் சீஷத்துவ வளர்ச்சியையும் தலைமைத்துவ வளர்ச்சியையும் ஏற்படுத்தும் சிறுகுழு ஊழியத்தை புறக்கணித்து விட்டு நவீன கால ஊழியர்கள் ஆடம்பர ஊழியங்கள் செய்வதை தவிர்த்தால் சபை வளர்ச்சி பன்மடங்கு பெருகும். சபை பணம் வேறு பிரயோஜனமான காரியங்களுக்கு பயன்படும்.

3. ஒவ்வொரு வாரமும் சிறுகுழுவாக விசுவாசிகள் கூடி வேதத்தை 6 மாதகாலம் நேரம் எடுத்து தியானிப்பதால், **வேதம் முழுவதுமாக,**

ஆழமாக, கருத்துடன் போதிக்கப்படுகின்றது. இதன் மூலம் ஆவிக்குரிய வளர்ச்சியும் சீஷத்துவ வளர்ச்சியும் இயற்கையாகவே நடைபெறுகின்றது.

4. சிறுகுழுவில் 15க்கு மேல் அங்கத்தினர்கள் சேர்க்கப்படுவதில்லை. ஆகையால், அங்கத்தினர்களின் அடிப்படை, ஆவிக்குரிய, சரீரத் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. இதன் வளர்ச்சி மிக வேகமாக நடைபெறுகின்றது. ஆனால் அதே நிலையில் சபைகளில் பெரிய கூட்டங்கள் கூடுவதால் மக்களின் அடிப்படை ஆவிக்குரிய தேவைகள் பூர்த்தி அடைவதில்லை. ஆவிக்குரிய தேவைகளையும், சிறுகுழு ஊழியம் ஐக்கியத்தையும், ஆவிக்குரிய தேவைகளையும் பூரணப்படுத்தும். மேலும் தலைமை பயிற்சி சீஷத்துவப் பயிற்சி ஆகியவற்றிற்கு சிறுகுழுவில் நல்ல தளங்கள் அமைக்கப்படுகின்றன.

5. **சிறுகுழு ஊழியம் போதகருக்கு வேலைப் பளுவை அதிக அளவில் குறைக்கும்.** சிறுகுழுவில் தலைவர், உதவித்தலைவர் ஆகியோர் அங்கு கூடி வருகின்ற பத்து அல்லது பதினைந்து பேர்களின் தேவைகளை முடிந்தவரை நிறைவேற்றுவதால், அவர்களால் தீர்க்கமுடியாத பிரச்சனைகள் அல்லது தேவைகள் மாத்திரமே போதகரின் கவனத் திற்கு செல்கின்றது. எத்திரோ விதி சொல்வத போல "சிறிய காரியங்கள் அனைத்தும் குழு தலைவரால் தீர்க்கப்பட்டு பெரிய பிரச்சினைகள் மாத்திரமே தலைவனிடம் (போதகரிடம்) எடுத்துச் செல்லப்படுகின்றது". ஆகவே போதகரின் வேலைப்பளு அதிகமாக குறைக்கப்படுகின்றது.

6. **சிறுகுழு ஊழியம் ஒரு ஆவிக்குரிய சமுதாயத்தை கட்டுகின்றது.** வீடுகளில் சிறுகுழு ஊழியம் நடைபெறுவதால், தனிப்பட்டவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு சபையில் சேர்வதைக்காட்டிலும் குடும்ப அங்கத்தினர்கள் அனைவருமாக சேர்க்கப்படுகின்றனர். இக்குடும்ப பிணைப்பு சபையிலும் தொடர வாய்ப்புண்டு. இதன் விளைவாக ஒரு ஆவிக்குரிய சமுதாயப் பிணைப்பு சபையில் ஏற்படும்.

7. சிறுகுழு ஊழியத்தில் **ஆவிக்குரிய வரங்கள் சபையைக் காட்டிலும் அதிக அளவில் விசுவாசிகளிடம் அடையாளம் காணப்பட்டு, அவைகள் ஊழிய வளர்ச்சிக்காக** பயன்படுத்தப்படும். வீடுகளில் சிறுகுழுக்கள் நடைபெறுவதால் அதன் அங்கத்தினர்கள் அனைவரும் எவ்வித பயமுமின்றி, தயக்கமின்றி வரங்களை பயன்படுத்துவார்.

9. கிறிஸ்துவின் ஊழியத்தை செய்வதற்கு போர் வீரர்கள் அவசியம். சபை வளர்ச்சிக்கு பெரிய குறையாக இருப்பதே தலைவர்கள் பஞ்சம் தான். கடந்த காலங்களில் சபையின் மற்ற ஊழிய முறைகளில் ஊழியத்தை முன்நின்று நடத்தும் சபை சீஷர்களை உருவாக்குவதற்கு பதிலாக சபையின் பலனை அனுபவிக்கும் பெலனில்லாத விசுவாசி களையே அதிகமாக உருவாக்கியிருக்கின்றது. ஆனால் சிறுகுழு ஊழியத்தில் வேதப்பாடங்கள் முறையாக பயிற்றுவிக்கப்பட்டு தலைமைத்துவ வாய்ப்புகள் இக்கூட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு தலைவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இவர்கள் நாளடைவில் போதகருடன் இணைந்து சபை ஊழியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

10. சிறுகுழு ஊழியத்தில் சபையின் பழைய விசுவாசிகளுக்கும், புதிய விசுவாசிகளுக்கும் ஒருவித பிணைப்பு இயற்கையாகவே நடை பெறுகின்றது. சபையின் மூத்த விசுவாசிகள் ஊழியத்தில் ஈடுபட்டு, புதிய விசுவாசிகள் சபைக்கு வழி நடத்தப்படுவதால், இவர்கள் புதிய உறவுடன் கண்காணிக்கப்பட்டு, கிறிஸ்துவில் வளர்வதற்கு ஊக்குவிக் கப்படுகின்றனர். சபையின் நடவடிக்கைகளிலும் ஆராதனைகளிலும் புதிய விசுவாசிகள் பங்கு பெற விசுவாசிகள் வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றனர்.

3

சிறுகுழுவைக் குறித்த வேத ஆதாரங்கள்

சிறு குழு ஊழியம் வேத அடிப்படையிலானது. வேதத்தின் பல பகுதிகளில் இதற்கான ஆதாரத்தை நாம் காணமுடியும்.

ஏதேன் தோட்டமும் சிறு குழுவும்

ஆதியாகமம் 1:1ம் வசனத்தில், ஆதியிலே பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற ஓர் சிறு குழு இருந்ததாக வாசிக்கின்றோம். மனிதனை தேவ சாயலாக அவர்கள் உண்டாக்கி பார்த்தபோது அவன் தனிமையாயிருப்பது நல்ல தல்ல என்று கூடுகையின்மகத்துவத்தை தேவன் வெளிப்படுத்தினார். (ஆதியாகமம் 2:18) மேலும் ஆதியாகமம் 3:8ல் கூறுவதுப் போல பகலின் குளிர்ச்சியான வேளையில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, ஆதாம், ஏவாள் ஆகிய 5 பேரும் குழுவாக கூடி ஐக்கியப்பட்டு மகிழ்ந்தனர். இவர்கள் அனைவரும் கூடி ஆதாம் ஏவாளோடு தேவன் பேசியும் (வேதம்) ஆதாம் ஏவாள் தேவனோடு பேசியும் (ஜெபித்தும்) மகிழ்ந்தனர்.

எத்திரோ விதி

மோசேயின் வனாந்திர சபையில் கிட்டத்தட்ட 20 முதல் 25 லட்சம் விசுவாசிகள் இருந்ததாக வேதம் குறிப்பிடுகின்றது (யாத்திராகமம் 38:26). மோசே அநேக நேரங்களில் நான் ஒருவனாக எப்படி மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பது என் புலம்பினான் (உபாகமம் 1:12) பல நேரங்களில் மோசே நாள் முழுவதும் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு செலவழித்தான்.

இந்த கால கட்டங்களில் தான் மோசேயின் மாமனார் எத்திரோ மோசேயை எச்சரித்து, இது உமக்கு பாரமான காரியம். நீர் ஒருவராய் இதை செய்ய (சுமக்க) உம்மாலே கூடாது என்று ஆலோசனை கூறினான். (யாத்திராகமம்18:17,18) இவ்விதி எதிர்காலத்தில் மோசே இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்தம்

பண்ணப்பட்ட தேசத்திற்கு எடுத்து செல்லவும், சபை மக்களை நல்ல முறையில் தேவனுக்குள் வழிநடத்தவும், அவர்களை நிர்வகிக்கவும் பேருதவியாக இருந்தது. எத்திரோ நான்கு வித ஆலோசனைகளை கூறினான்.

1. சபையில் தலைவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்
Select the leaders

ஜனங்களில் தேவனுக்கு பயந்தவர்களாயும், உண்மையுள்ளவர்களாயும், பொருளாசையை வெறுக்கிறவர்களாயும், திறமையுள்ளவர்களாயும் உள்ள தலைவர்களை தேவனுடைய ஊழியத்திற்கு தேர்ந்தெடுக்க வேண்டும் (யாத்திராகமம் 18:21) என்று கூறினார்.

2. தேர்ந்தெடுத்த தலைவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். Train them

அவர்களுக்கு கட்டளைகளையும், பிரமாணங்களையும் வெளிப்படுத்தி, அவர்கள் நடக்க வேண்டிய வழியையும், அவர்கள் செய்ய வேண்டிய காரியத்தையும் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றான் மோசேயின் மாமனார் (ஆதியாகமம் 18:20)

3. வேலையை பகிர்ந்து கொடு
Delegate teh Responsibilites

அவர்கள் ஜனங்களின் நியாயங்களை விசாரித்து பெரிய காரியங்கள் யாவையும் மோசேயிடத்தில் கொண்டு வரவேண்டும். சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும். இப்படி அவர்கள் மோசேயின் பாரத்தை இலகுவாக்க எத்திரோ ஆலோசனை சொன்னான் (யாத்திராகமம் 18:22).

4. தலைவர்களாக ஏற்படுத்து
Appoint them as Leaders

அவர்களை ஆயிரம் பேருக்கு அதிகாரிகளாகவும், ஐந்நூறு பேருக்கு அதிகாரிகளாகவும் ஐம்பது பேருக்கு அதிகாரிகளாகவும், பத்து பேருக்கு அதிகாரிகளாகவும் ஏற்படுத்த வேண்டும் என கூறினான் (யாத்திராகமம் 18:21).

இந்த எத்திரோவின் ஆலோசனையில் ஏராளமான பாடங்கள் சபைக்கும் சபைத் தலைவர்களுக்கும் சொல்லப்பட்டுள்ள. சபையில் 10 பேருக்கு ஒரு

தலைவரை ஏற்படுத்த வேண்டும் என்றும், போதகரே எல்லா வேலைகளையும் செய்யவேண்டியதில்லையென்றும், சபையில் தேவனுக்கு பயந்து ஜீவிக்கின்ற விசுவாசிகளுக்கு பயிற்சி கொடுத்து தலைவர்களாக நியமிக்கலாம் என்ற ஆலோசனையை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தேவன் எத்திரோ மூலம் சொல்லியிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவும் சிறு குழுவும்

இயேசு கிறிஸ்து ஏன் 12 சீஷர்களை தமக்கு ஏற்படுத்தினார் தெரியுமா? இன்று மனித இன ஆராய்ச்சியாளர்கள் (Sociologist) ஒரு குழுவில் 12 நபர்களுக்கு மேல் இருந்தால் சிறு குழுவின் வல்லமை (Group Dynamism) போய் விடும் என்கின்றனர். வேத வல்லுனர்கள் கூறும் போது கிறிஸ்துவின் 50 சதவீத நேரத்தை யோவான், யாக்கோபு, மற்றும் பேதுரு என்ற 3 சீஷர்களிடமும், 25 சதவீத நேரத்தை எஞ்சிய 9 சீஷர்களிடம் மீதமான 25 சதவீத நேரத்தை பொது மக்களிடமும் செலவழித்ததாக கூறுகின்றனர். மேலும் கிறிஸ்து அதிகமான நேரங்களை சிறு குழுக்களுடன் செலவழித்ததுடன், தன் வாழ்வின் நடவடிக்கைகள் மூலமும் போதனையின் மூலமும் தன்னை பின்பற்றின மக்களை சத்தியத்தில் பெலப்படுத்தினார்.

ஆதித் திருச்சபையும் சிறு குழுவும்

கிறிஸ்து பரமேறியவுடன் ஆதித் திருச்சபை சிறு குழுவாக இல்லங்கள் தோறும் நடைபெற்றது. கிறிஸ்தவர்களை ஆரம்ப காலகட்டங்களில் யூதர்கள் வெறுத்தபடியால், ஜெப ஆலயங்களில் ஆதித்திருச்சபை விசுவாசிகள் கூடி ஜெபிக்க முடியவில்லை. மேலும் கி.பி. 313 வரை கிறிஸ்தவர்களின் ஆராதனைக்கு ஆலயங்கள் கட்டப்படவில்லை. ஆகவே கிறிஸ்தவர்கள் வீடுகளில் சிறு குழுக்களாக கூடி ஜெபித்தனர்.

வேதத்தில் ஆதித்திருச்சபை வீடுகளில் ஆராதனை (house churches) நடந்ததற்கான ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. அப்போஸ்தலர் 2:41-47ல் காணப்பட்ட நடவடிக்கைகள் சபை வளர்ச்சியின் அடிப்படை ஆதாரங்களாக உள்ளன. வீடுகளில் நடத்தப்பட்ட ஜெபக்குழுக்களின், மூலமாக ஆதித்திருச்சபை அபரீத வளர்ச்சியை கண்டது (அப்போஸ்தலர் 12:12; ரோமர் 16:5; பிலேமோன்2; கொலோசெயர் 4:15).

ஆதித் திருச்சபை இரண்டு இறகு பறவையைப் போன்று செயல்பட்டது. சபை கூடுகை என்ற இறகும், சிறுகுழு என்ற மற்றொரு இறகுடன் இணைந்து செயல்பட்டது.

இதில் ஒரு இறகாகிய சிறுகுழுவை குனசந்திராயன் என்ற அஞ்ஞான அரசன் பிடுங்கிப் போட்டான். வீடுகளில் கூடின சிறுகுழுவை தடை செய்து கி.பி. 323 முதல் சபை கூடுதலை சட்டமாக்கினான். இதனால் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சியும் சபை வளர்ச்சியும் வெகுவாக தடைப்பட்டதுடன், ஊழியம் விசுவாசி களின் கரங்களிலிருந்து பிடுங்கப்பட்டு போதகர்களிடம் கொடுக்கப்பட்டது.

மற்றொரு இறகு சபை கூடுகை. வாரத்தில் ஒரு நாள் சபை மக்கள் அனைவரும் கூடி, பாடி, துதித்து, பிரசங்கித்து, ஆராதனை செய்வது. வாரத்தின் மத்திய நாட்களில் வீடுகளில் சிறுகுழுவாக கூடி வேதம் வாசித்தும், ஜெபித்தும், சீஷத்துவ வளர்ச்சி பெற்றனர். ஆயினும் வாரத்தின் ஓய்வுநாளில் அனைரும் கூடிவந்து தங்களது சபை ஐக்கியத்தை காத்துக் கொண்டனர்.

4

சிறு குழு ஊழியம் செய்ய என்ன தகுதிகள் வேண்டும்?

சிறு குழு ஊழியத்தில் யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். ஆனால் சிறு குழுக்களை முன்னின்று நடத்துபவர்கள் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடைந்தவர்களாக இருத்தல் அவசியம். எபேசியர் 4:16ல் இவர்களை "கணுக்கள்" என்கின்றது. கணுக்கள் எலும்புகளோடு சதையை இணைக்கின்ற பாகம். ஒரு பக்தன் கூறும்போது, சபை விசுவாசிகளாகிய நாம்தான் தேவனாகிய சபையை தாங்கிப் பிடிக்கின்ற கணுக்கள். அதென்னவெனில் கணுக்களாகிய நீங்கள் சபையில் அப்போஸ்தலராகவோ அல்லது போதகராகவோ இல்லாம் இருக்கலாம். ஆனால் நீங்கள் கண்டிப்பாக சபையை தாங்கிப்பிடிக்கும் ஆவிக்குரிய பெற்றோர் என்கின்றார். இது எவ்வளவு உண்மை!

ஆவிக்குரிய பெற்றோர் என்பவர், மற்றவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவி செய்ய முன் வருபவர். இரட்சிக்கப்பட்ட அல்லது இரட்சிக்கப்படாத மக்களை சந்தித்து தங்களின் சொந்த கிறிஸ்தவ வாழ்க்கையின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதின் மூலம் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள்.

சிறு குழு ஊழியத்தில் பங்கு பெறுபவர்களின் குணநலன்கள்

1. கிறிஸ்துவை தன் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக ஏற்று, அவரை பின்பற்றுபவராக இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 11:1).

2. தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் வெளிப்படையான (Transparent) வாழ்க்கை நிலையை உடையவராக இருத்தல் வேண்டும் (1தெச 2:8; 1 தீமோத்தேயு 3:10).

3. மக்களிடம் பழகவும், பிரியமாய் நடந்து கொள்ளவும் விருப்பமுடையவராக இருக்க வேண்டும்.

4. மக்களுக்குள் மறைந்து கிடக்கும் திறமைகளை கண்டறிந்து அவைகளுக்குள் அவர்களை வளர்த்து விடக்கூடிய நபராக இருத்தல் வேண்டும்.

5. தங்களை தாங்களே முதலாவது நன்குஅறிந்திருக்க வேண்டும். அதாவது அவர்களது பெலத்தையும் பெலவீனத்தையும் நன்கு உணரவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அநேக காரியங்களை இப்பொழுதே சிறுகுழு தலைவர்களிடத்தில் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் தேவ பெலத்தினாலும் நம்முடைய அயராத முயற்சியினாலும் தேவ ஊழியத்தில் அவர்களை ஈடுபடுத்திக் கொள்ளும் போது பெற்றுக் கொள்ளலாம்.

சிறு குழு தலைவர்களிடையே காணப்பட வேண்டிய பொதுவான பண்புகள்

1. சிறு குழு தலைவர் மற்றவர்களின் குறைகளை கேட்பவராக இருக்க வேண்டும்

- ஒருவர் நம்மிடத்தில் பேசும் போது கவனித்து உற்றுக்கேட்கவேண்டும்
- நம் உடலசைவுகள் நாம் பேசும் வார்த்தைகளைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது. நாம் உட்கார்ந்திருக்கின்ற தோரணை, கைகளையும், தலைகளையும் அசைக்கின்ற விதம், கண் பார்வை போன்றவை மிக முக்கியம்.
- அவர்கள் பேசி முடிப்பதற்கு முன்னதாகவே உங்களுடைய தீர்ப்பை சொல்லிவிடாதீர்கள்.

அட்டவணையில் உள்ள கேள்வித்தாளை பூர்த்தி செய்து மதிப்பிட்டுக்கொள்ளுங்கள்

2. சிறு குழு தலைவர் மன்றாட்டு ஜெபம் ஏறெடுக்க வேண்டும்

- அப்போஸ்தலர் 12:1-9: பேதுருவுக்காக சபை விசுவாசிகள் ஜெபித்தனர்
- ரோமர் 8:26 ஆவியானவர் நமக்காக மன்றாடுகிறார்
- யாத்திராகமம் 2:23-25 கர்த்தருடைய பிள்ளைகளுக்காக தேவன் வாதாடுகின்றார்

- எசேக்கியேல் 22:30-31; கர்த்தர் மன்றாட்டு ஜெபம் ஏறெடுப்பவர்களை தேடுகின்றார்.
- யோபு 42:10 யோபு தன் சிநேகிதர்களுக்காக ஜெபித்தார்.

3. **சிறு குழு தலைவர்கள் மற்றவர்களுக்கு முன் மாதிரியாய் இருக்க வேண்டும்**

- மக்கள் நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் தனித்தீவல்ல
- 1 கொரிந்தியர் 4:16 என்னைப் போலாகுங்கள் என்று பவுல் சொல்லுகின்றார்
- நாம் நல்ல மாதிரியாயிருப்பதற்கு பரிபூரணமடைந்திருக்க (Perfect) வேண்டும் என்று அவசியமில்லை. முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர் களாக இருந்தாலே போதுமானது (Mature Christians).

4. **சிறு குழு தலைவர்கள் போதிக்கின்றவர்களாக இருத்தல் வேண்டும்**

- வேதத்தை நம் அனுபவத்தோடு சேர்த்து பேச வேண்டும்
- கலந்துரையாடல்களோடு வேதத்தை போதிக்க வேண்டும்

5. **சிறு குழு தலைவர்கள் அவர்களின் குழு அங்கத்தினர்களை சரியான வழியில் நடத்தி உற்சாகப்படுத்த வேண்டும்**

6. **சிறு குழு தலைவர்கள் கனிவுடன் குழு அங்கத்தினர்களின் பிழைகளை திருத்த வேண்டும்**

7. **சிறு குழு தலைவர்கள் வாழ்க்கையின் எல்லா பிரச்சனைகளுக்கும் கிறிஸ்துதான் பரிகாரி என்பதனை குழு அங்கத்தினர்களுக்கு போதிக்க வேண்டும். தாங்களும் பின்பற்ற வேண்டும்.**

5

சிறு குழுக்களை ஆரம்பிப்பது எப்படி?

சிறு குழு ஊழியம் என்பது சபையின் மற்ற இலாக்கக்களைப் போல ஒரு இலாகாவல்ல. சபை மக்கள் அனைவரும் (it is a programme of the whole church with the whole people) போதகரோடு இம்முயற்சியில் ஈடுபட வேண்டும். அப்பொழுது தான் நாம் நினைக்கின்ற வெற்றி கிடைக்கும்.

சிறுகுழுக்களை நாம் சபையில் ஆரம்பிக்க எத்தனிக்கும் போது அடிப்படையில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, அவைகள் ஜெபத்துடன் செயல்படுத்தப்பட வேண்டும். சபை ஊழியம் இரண்டு வகைப்படும்.

1. சபைக்குள் ஊழியம் (In reach Ministry)
2. சபைக்கு வெளியே (Out rerach Ministry)

சிறு குழுக்களை ஆரம்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் 3லிருந்து 6 மாதங்கள் வரை போதகரும் சபை விசுவாசிகளும் மிகுந்த ஜெபத்துடன் திருச்சபையை இவ்வூழியத்திற்கு பக்குவப்படுத்த வேண்டும். சபைக்கு உள்ளான ஊழியம் சரிவர செய்யப்படாமல் வெளி ஊழியம் சிறப்படையாது.

சிறுகுழு என்று நாம் கூறும்போது அதுஇரண்டு வகைப்படும்

1. **தலைவர்கள் சிறுகுழு :** இது சபையில் ஊழியம் செய்யவிரும்பும் மூத்த விசுவாசிகள் கூடி போதகரின் தலைமையில் எடுத்துக் கொள்ளும் பயிற்சி வகுப்பு
2. **பொதுவான சிறுகுழுக்கள் :** சபையில் பயிற்சி பெற்ற மூத்த விசுவாசி களைக் கொண்டு கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சத்தியத்தைச் சொல்ல வீடுகளில் 3லிருந்து 12 பேர்கொண்ட குழுக்களாகும்.

சிறு குழுக்கள் சபையில் ஆரம்பிக்கப்படும் முன்பு நாம் பல ஆயத்தங்களை செய்ய வேண்டும்.

சிறுகுழு ஊழியத்தின் 7 படிகள்



ஆயத்தம் : 1 சபையில் ஜெப குழுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்

(Life Transformation Group)

சபையில் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்ய ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களையும், சபையில் உள்ள மற்ற விசுவாசிகளையும் இணைத்து ஆரம்பிக்கும் குழுக்கள் தான் இந்த (LTG) ஜெபக்குழுக்கள். உதாரணத்துக்கு 50 பேர் கொண்ட சபையாக இருப்பின் 10 அல்லது 15 ஜெபக்குழுக்களாவது ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஓய்வுநாள் ஆராதனையிலும் இந்த ஜெபக் குழுக்களைக் குறித்து அறிக்கைகளும், அறிவுறுத்தலும் போதகர் மூலமாக சபையில் அறிவிக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட வேண்டும். ஜெபிக்கின்ற சபைகள் தான் சாத்தானை வெளியேற்ற முடியும். ஊழியத்தில் விசுவாசிகளை உற்சாகப்படுத்த முடியும்.

ஜெபக் குழுக்களுக்கான சில செயல் ஆலோசனைகள்

1. இக்குழுக்கள் இரண்டு அல்லது மூன்று பேராக ஆண்களாகவும், பெண்களாகவும் தனித்தனியாக கூடலாம். கணவன் மனைவியாக இருந்தால் விதிவிலக்கு

2. இச் ஜெபக் குழுக்கள் வாரத்திற்கு ஒரு முறை சந்திப்பது நல்லது.

3. சந்திக்கும் நேரம் அங்கத்தினர்களாய் முடிவு செய்யப்படினும், குறைந்த பட்சம் 1.00 மணி நேரம் இந்த சந்திப்பு நீடிப்பது நல்லது. சந்திக்கும் நாள் வாரத்தின் மத்திய நாளாக இருக்கலாம் (செவ்வாய், புதன், வியாழன் போன்ற கிழமைகளில்)

4. சந்திப்பின் இடம் : பூங்காக்கள், கடற்கரை, அலுவலகம், சபை போன்ற இடங்கள் உகந்தது.

5. மேலோட்ட சந்திப்போடு உறவு நின்று விடாதபடிக்கு இணைந்து உபவாச ஜெபம், வேத ஆராய்ச்சி, ஆத்தும ஆதாய ஊழியம் என்று செய்ய ஆரம்பிக்கலாம்.

மனமாற்றம் ஏற்படுத்தும் குழுக்கள் & செயல்படும் விதம்



முதலில் இம்முயற்சி தனி நபரிடமிருந்து தொடங்குகின்றது. அதாவது சபை விசுவாசியிடமிருந்து இரண்டு பேராக சேர்ந்து ஜெபித்து பிறகு கிராமம், நகரம், சமுதாயம் என்று ஜெபிக்கத் தூண்டி, அதன் விளைவாக உறவினர்கள் நண்பர்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்கத் தூண்டும் இரண்டிரண்டு பேராக ஆரம்பத்தில் ஜெபிக்க ஆரம்பிக்கப்பட்ட மனமாற்ற குழுக்கள் - ஊழிய குழுக்களாக மாறும். இது நடைமுறையில் முற்றிலும் சாத்தியமானது.

இக்கூட்டங்களில் ஜெபக்குழு அங்கத்தினர்களிடையே சில உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது நல்லது.

- ✦ எதையும் மறைக்காமல் பேசுவேன்
- ✦ ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பேன்
- ✦ வாரம் தவறாமல் சந்திப்பேன்
- ✦ அங்கத்தினர்களின் இரகசியங்களை காப்பேன்
- ✦ ஜெப நண்பரின் ஆவிக்குரிய வளர்ச்சி குன்றும் வண்ணம் எதையும் பேசவோ, செய்யவோ மாட்டேன்
- ✦ சரீர, ஆவிக்குரிய உதவிகளை என் ஜெப நண்பருக்காக இயன்ற மட்டும் செய்வேன் போன்றன.

ஆயத்தம் : 2 சிறு குழு தலைவர்களின் பயிற்சி வகுப்புகள்
(Cell Leadership Training Groups)

நாம் சபைக்கு வெளியே சிறு குழுக்களை ஆரம்பிக்கும் முன்பாக சபையில் ஊழியம் செய்ய விருப்பம் தெரிவிக்கும் ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த விசுவாசிகளைக் கொண்ட குழு சபையில் ஆரம்பிக்கப்பட வேண்டும். 50 பேர் கொண்ட சபையில் குறைந்த பட்சம் 15 லிருந்து 20 வசுவாசிகளாவது இவ்வூழியத்தில் பங்கு பெற சபை போதகர் உற்சாகப்படுத்த வேண்டும். இக்குழு வாரம் ஒரு முறை சபை போதகர் தலைமையில் கூடி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படலாம்.

- ✦ சபை வளர்ச்சியில் விசுவாசிகளின் பங்கு
- ✦ ஆவிக்குரிய வரங்கள் என்றால் என்ன? அதை எப்படி ஊழியத்தில் பயன்படுத்துவது?

- மக்களை ஊழியத்தில் சந்திப்பது எப்படி?
- வேத பாடம் கொடுப்பது எப்படி?
- சிறு குழு ஊழியம் என்றால் என்ன?
- சிறுகுழு ஊழியத்தை நடத்துவது எப்படி?
- சுகாதார ஊழியத்தை செயல்படுத்துவது எப்படி?

என்பன போன்ற தலைப்புகளிலே வாரம் ஒருமுறை போதகரின் தலைமையில் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வகுப்புகளும் கலந்துக் கொள்கின்ற விசுவாசிகளை ஊழியத்தில் ஊக்கப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.

சபை போதகர் ஒரு வேளை எல்லா தலைப்புகளிலும் வகுப்புகள் நடத்துவதற்கு திறன் பெறாதவராக இருப்பின், திறன் பெற்ற நபர்களை மற்ற சபைகளிலிருந்தோ அல்லது சபை தலைமையலுவலகத்திலிருந்தோ சபை நிர்வாகிகள் அனுமதியுடன் அழைக்கலாம். அப்படிப்பட்ட வேளைகளில் வாரத்திற்கு ஒரு முறைக்கு மேல் விசுவாசிகளை அழைத்து பயிற்சி கொடுக்கலாம்.

ஆயத்தம் – 3: நட்புறவு பெயர்ப்பட்டியல் (Oikos List)

பயிற்சி பெறுகின்ற சிறு குழு தலைவர்கள் அனைவரும் தனித்தனியே தாங்கள் ஊழியத்தினிமித்தம் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்த விரும்பும் பெயர்களை குறிப்பிடும் பட்டியல் தான் நட்புறவு பெயர்ப்பட்டியல்

எண்	உங்கள் நட்புறவிலே உள்ள நபர்களின் பெயர்கள்	டைப் A	டைப் B	இயேசுவை ஏற்றுக் கொள்ள உண்டான தடைகள்
1.	வெங்கட கிருஷ்ணன்	✓		வேலையின்மை

மேற்குறிப்பிட்ட பட்டியலில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் சிறு குழு தலைவர்கள் தாங்கள் இரட்சிப்புக்குள் வழி நடத்த விரும்பும் நபர்களின் பெயர்களை எழுத வேண்டும். இந்த பட்டியலில் இடம் பெறுகின்ற நபர்கள்

வாரத்திற்கு ஒரு முறையாவது சந்திக்கப்படுகின்ற மக்களாக இருக்க வேண்டும். உதாரணம்: இரட்சிக்கப்படாத குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள், உறவினர்கள், நீங்கள் வசிக்கும் தெருவில் வசிப்பவர்கள், உடன் வேலை செய்யும் நண்பர்கள் மற்றும் பலர் இந்தப் பட்டியலில் இடம் பெறலாம்.

இப்பட்டியலில் இரண்டு வித பெயர்களை பட்டியலிடலாம்.

1. **முதன்மையான பட்டியல்** (Primary Group). இதில் இரட்சிப்பு வேண்டும் என நாம் விரும்பும் நமது குடும்ப அங்கத்தினர்கள்.
2. **இரண்டாம் தர பட்டியல்** (Secondary Group). இதில் நாம் இரட்சிப்படைய வேண்டும் என விரும்பும், நண்பர்கள், அயலகத்தார் அன்றாடம் சந்திக்கும் நண்பர்களின் பெயர்களை எழுதலாம்.

ஆயத்தம் 4 : மறுமொழி முக்கோணம் (Pyramid Response)

மேற்குறிப்பிட்ட நட்புறவு பெயர்பட்டியலில் எழுதிய பெயர்களை மறுமொழி முக்கோணத்தின் அடிப்படையில் பிரிக்க வேண்டும். மறுமொழி முக்கோணம் என்பது மக்களை அவர்களின் அடிப்படை மனப்பாங்கிற்கு ஏற்ற வண்ணம் பிரிப்பது.

ஜனங்கள் வித்தியாசமானவர்கள். பலவித மனப்பாங்கு உடையவர்கள். வெவ்வேறு சூழ்நிலைகளில் வாழ்வார்கள். ஆனால் அனைத்து பிரிவு மக்களுக்கும் கிறிஸ்துவை அறிவிப்பது நமது கடமையாகும்.

இந்த முக்கோணத்தை கவனியுங்கள். இதில் ஐந்து வகை மக்கள் உள்ளனர்.

முதல் வகை – எளிதில் சந்திக்கப்படக் கூடிய மக்கள் மற்றும் ஒப்புக் கொடுக்க ஆயத்தமாக இருப்பவர்கள்
(A பிரிவைச் சேர்ந்தவர்கள்)

- சபை கூடுகைக்கோ அல்லது பராமரிப்பு குழு கூட்டத்திற்கோ வர விருப்பமுடைய மக்கள்
- கடவுள் உண்டு, வேதம் உண்மை, இயேசு கிறிஸ்து, அவரின் இரட்சிப்பு ஆகியவற்றை ஓரளவு அறிந்தவர்கள்.
- இயேசுவின் அன்பையோ, அல்லது அவரால் உண்டாகும் இரட்சிப்பையோ அனுபவித்தது இல்லை... ஆனால் இயேசு மீது பற்று உண்டு.

Response Pyramid

People are not the same

ஒப்புக் கொடுக்க
ஆயத்தமாக
இருப்பவர்கள்
Type "A" Believers

ஒப்புக் கொடுக்க
ஆயத்தமாக
இல்லாதவர்கள்
Type "B"
Unbelievers



- பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருக்கலாம். இரட்சிப்பின் அனுபவம் கிடையாது. அதே நேரத்தில் இயேசுவுக்கோ அல்லது திருச்சபைக்கோ எதிர்ப்பு கிடையாது.
- இவர்களுக்கு வேத பாடம் கற்றுக் கொடுப்பது அல்லது இரட்சிப்பின் திட்டத்தை இவர்களிடம் பகிர்ந்து கொள்ளுவது என்பது எளிது.

இரண்டாம் வகை ஒப்புக்கொடுக்க விருப்பமில்லாதவர்கள் எளிதில் சந்திக்க முடியாத மக்கள் (B பிரிவைச் சேர்ந்தவர்கள்)

- கிறிஸ்தவ விசுவாசத்தை விரும்பாதவர்கள்
- சபைக்கு செல்ல விருப்பமில்லாதவர்கள்
- தேவனையோ அல்லது தன் வாழ்க்கைக்கு தேவைப்படும் தேவனுடைய திட்டத்தையோ தேடாத நபர்கள்.
- கிறிஸ்தவத்தைக் குறித்து முழுமையான ஞானமில்லாதவர்கள்
- இயேசுவைக் குறித்தும், வேதத்தைக் குறித்தும், சபையைக் குறித்தும் மிகக் குறைவான ஞானமுள்ளவர்கள்
- இவர்களுக்கு உடனடியாக வேத பாடம் கொடுப்பது மற்றும் இரட்சிப்பின் திட்டத்தை பகிர்ந்து கொள்வது ஏற்றதல்ல. இவர்களுடன் முதலாவது நல் உறவை வளர்த்து கொள்ள வேண்டும்.

ஆகவே இரண்டு காரியங்களை இம் முக்கோணத்தில் கவனிக்க வேண்டும். ஒன்று விசுவாசிகள் யாவரும் ஒரே நிலையில் இல்லை. ஆகவே ஒரே வழி முறை எல்லாருக்கும் ஏற்றதாக இருக்காது. இரண்டு ஒப்புக்கொடுக்கும் நிலையில் உள்ள மக்களைக் காட்டிலும், உறவை வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ள மக்களே அதிகம் உள்ளனர். எனவே சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுமுன் உறவை வளர்த்து கொள்ள நாம் கவனமாயிருக்க வேண்டும்.

இவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்வதற்கு காணப்படுகின்ற பிரத்யேகமான தடைகள் என்ன என்று தெரிந்தால் அதனையும் இந்த பெயர்ப் பட்டியலில் அவர்களின் பெயருக்கு நேராக எழுத வேண்டும்.

எழுதப்பட்ட பெயர்களுக்காக தனிப்பட்ட வேளையிலும், குடும்ப ஜெபத்திலும் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். கூடுமானால் உபவாசித்தும் ஜெபிக்கலாம்.

இரட்சிப்புக்கு தடையாக காணப்படுகின்ற சக்திகளை அடையாளம் கண்டு அழிந்து இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க வேண்டும்.

நட்புறவு பெயர்ப்பட்டியலில் உள்ள மக்களுடன் தொடர்பு கொண்டு உறவை நன்கு வளர்த்துக் கொள்ள வேண்டும். உறவை வளர்க்காமல் ஆத்தும ஆதாயம் செய்வது கடினம்.

ஆயத்தம் 5: சிறு குழு தலைவர்களை தெரிந்தெடுத்தல் (Selection of Cell Leaders)

புத்தகத்தின் பின்புறத்திலுள்ள தலைவர்களை தேர்ந்தெடுக்கும் வழி காட்டியை பின்பற்றலாம். சிறு குழு ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்சம் மூன்று நபராவது வேண்டும். முதலாமவர் சபை போதகர். (T3) இவர் தான் சிறு குழு ஊழியத்தின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். இரண்டாமவர் சிறு குழு தலைவர். (T2) பொதுவாகவே சபையின் முதிர்ச்சியடைந்த விசுவாசியாகவும் தலைமைத்துவ தாலந்துகள் நிறைந்தவராகவும் இருப்பார். மூன்றாமவர் உதவி தலைவராகவும் (T1) அதே சமயம் சிறு குழுவின் உபசரிப்பாளராகவும் (Host) செயல்படுவார்.



ஆயத்தம் 6: சாட்சி பகருதல்

மிகுந்த கவனத்தோடும், பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையோடும் ஒருவரது சாட்சி பகிர்ந்து கொள்ளப்படுமானால் எந்த சூழ்நிலையிலும் அது கேட்போரின் உள்ளத்தில் கிரியை செய்து இரட்சிப்புக் கேதுவான பலனைத் தரும் என்பதில் சந்தேகமில்லை. மிகவும் எளிய நடையில், ஆனால் தேவையான

வார்த்தைகளால் மட்டும் கிறிஸ்துவை அறிவிக்கும் வாஞ்சை நமக்கு இருக்குமானால் நமது அனுபவ சாட்சியை கேட்பவர்கள் யார் கிறிஸ்து என்று அறிந்து கொள்வது மட்டுமின்றி அவரையே தங்கள் வாழ்க்கையின் நாயகனாகவும் ஏற்றுக் கொள்ள வாய்ப்புண்டு.

சாட்சியை பகிர்ந்து கொள்ள தேவையான எட்டு குறிப்புகள்

1. சாட்சி பகிர்ந்து கொள்ளத் தேவையான ஞானமும் தேவ வழி நடத்துதலும் வேண்டுமென கர்த்தரிடத்தில் கேளுங்கள்.

2. கிறிஸ்துவோடு என் வாழ்க்கை என்ற தலைப்பில் 3 குறிப்புகளில் உங்கள் சாட்சியை உள்ளடக்குங்கள்.

✦ கிறிஸ்துவை அறிவதற்கு முன் உங்கள் வாழ்க்கை நிலை

✦ கிறிஸ்துவை நீங்கள் அறிந்து கொண்ட விதம்

✦ கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் உங்கள் வாழ்வில் ஏற்படுத்திய மாறுதல்கள் மற்றும், அவர் உங்களுக்குச் செய்த நன்மைகள்

3. நீங்கள் சிறு பிராயத்திலிருக்கும் போது கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதுண்டானால் மேலே சொல்லப்பட்ட மூன்றாவது குறிப்பை சற்று ஆணித்தரமாக சொல்லுங்கள்.

4. ஆர்வம் நிறைந்து, கேட்போரின் கவனத்தை ஈர்க்கக் கூடிய வார்த்தைகளை கொண்டு, உங்கள் சாட்சியை ஆரம்பியுங்கள். சிந்தனையை தூண்டக்கூடிய உண்மைச் சம்பவங்களையும், தகவல்களையும் இடையில் சேர்த்துக் கொள்ளுங்கள். ஒரு நல்ல முடிவோடு உங்கள் சாட்சியை முடியுங்கள்.

5. உங்கள் சாட்சியின் முக்கிய பகுதிகளில் போதுமான அளவுக்கு விளக்கங்கள் இருக்கட்டும்.

6. உங்கள் சாட்சியைக் கேட்போர் நீங்கள் சொல்லும் வார்த்தைகளில் அப்படியே மூழ்கிப்போகும் அளவுக்கு உங்களுடைய கடந்த கால நிகழ்வாக அனுபவங்களை உங்கள் சாட்சியில் உள்ளடக்குங்கள்.

7. ஒன்று அல்லது இரண்டு வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டினால் நல்லது.

8. சாட்சியை பகிர்ந்து கொள்ளும் முன்னதாகத் தேவையான குறிப்புகளை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

சாட்சி பகரும்போது தவிர்க்க வேண்டிய 5 குறிப்புகள்

1. நீங்கள் பகிர்ந்து கொள்ளும் சாட்சியானது கிறிஸ்தவர்களுக்கல்ல. சாதாரண கிறிஸ்தவரல்லாத மக்களுக்கு. ஆகவே அவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத வார்த்தைகளான 'இரட்சிப்பு' 'மனந்திரும்பு தல்', 'மறுபடி பிறத்தல்', 'பாவம்' ஆகிய வாரத்தைகளை உபயோகிக்க வேண்டாம். இது சில நேரங்களில் தவறாக மற்ற மதத்தினரால் புரிந்து கொள்ளப்பட்டு, பரிகசிக்கப்படும்.

2. தேவைக்கு அதிகமான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம். நீங்கள் எத்தனை மோசமான மனிதனாக வாழ்ந்தீர்கள் என்பதை அழுத்தி சொல்ல வேண்டாம்.

3. சபை பிரிவுகளைக் குறித்து ஒரு போதும் தவறாக பேச வேண்டாம்.

4. மற்ற மதத்தினரைக் குறித்தோ, தனிப்பட்டவரின் தெய்வ நம்பிக்கை யைக் குறித்தோ தாழ்வாக, இழிவாக, குற்றப்படுத்தி பேச வேண்டாம்.

5. கிறிஸ்துவ வாழ்க்கை 'செழுமை நிறைந்தது' 'உலக ஐசுவரியங்கள் நிறைந்தது' என்ற தவறான கருத்தை, சாட்சியைக் கேட்போருக்கு வலியுறுத்திச் சொல்ல வேண்டாம்.

ஆயத்தம் 7: வேத பாடங்களை ஆயத்தம் செய்தல்

சிறு குழுவில் ஒரே ஒரு வேதபாடத்திட்டம் எல்லா இடங்களிலும் செயல்படாது. சிறுகுழுவின் அங்கத்தினர்களின் ஆவிக்குரிய தன்மை, ஆவிக்குரிய வளர்ச்சி ஆகியவற்றை மனதில் கொண்டு வேதபாடங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.வேத பாடங்களை தயாரிக்கும் போது நாம் மனதில் கொள்ள வேண்டிய சில வழிமுறைகள்.

1. போதகரின் தலைமையில் கீழ் சிறுகுழு தலைவர்கள், உபதலைவர்கள் ஆகியோர் குழுவாக ஆலோசித்து ஜெபத்துடன் வேத பாடங்களை தயார் செய்யபட வேண்டும்.

2. ஆவிக்குரிய வாழ்வின் குறைவான வளர்ச்சியைப் பெற்றுள்ள மக்களுக்கு அல்லது கிறிஸ்துவ மதத்தை பற்றியே தெரியாதவர்

களுக்கு, கிறிஸ்துவின் அற்புதங்கள், உவமைகள் பழைய ஏற்பாட்டில் தேவன் அற்புதமாய் நடத்தின கதைகளையெல்லாம் (Story Telling) சொல்லலாம்.

3. வேதத்தில் சற்று தேறின மக்களுக்கு வேதத்தின் அடிப்படை கோட்பாடுகளான கிறிஸ்து யார்? இயேசுவின் இரண்டாம் வருகை, மரணம் என்றால் என்ன? கிறிஸ்தவ வாழ்வில் காணப்பட வேண்டிய பண்புகள் என்ன? என்பன போன்ற தலைப்புகளில் பேசலாம்.

4. சிறுகுழு அங்கத்தினர்கள் ஆவிக்குரிய வளர்ச்சி பெறும் நான்கு மதங்களுக்கு பிறகு கருகலான வேத சத்தியங்களான மரணத்தில் மனிதனுக்கு நிகழ்வது என்ன? வேதனையில் கிறிஸ்தவ வாழ்வில் வெற்றிபெறுவது எப்படி? கடைசி கால சம்பவங்கள் யாவை? ரகசிய வருகை என்றால் என்ன? என்பன போன்ற சத்தியங்களை தியானிக்கலாம்.

5. குறைந்த பட்சம் 6 மாதங்களாவது வேத பாடங்கள் முறையாக பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

6. சிறுகுழு அங்கத்தினர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை சரியான நேரத்தில் இனங்கண்டு, ஞானஸ்நான வகுப்புகள் 5ம் மாதத்திலேயே தொடங்கப்பட வேண்டும்.

7. வேதபாடங்கள் முறையாக போதிக்கப்பட்டவுடன் கிறிஸ்தவ வளர்ச்சி, சாட்சி பகருதல், தலைமைத்துவ பயிற்சி ஆகியவற்றைக் குறித்து போதிக்க வேண்டும்.

8. சிறுகுழு அங்கத்தினரின் ஆவிக்குரிய வளர்ச்சியை அடிப்படையாக வைத்து போதகரும் சிறு குழு தலைவரும் ஞானஸ்நானத்திற்கு அங்கத்தினர்களை வழி நடத்தலாம்.

6

சிறு குழு ஊழியத்தின் சபை போதகரின் பங்கு

சிறுகுழு ஊழியத்தின் தலைவர் இயேசு கிறிஸ்து. இதன் ஒருங்கிணைப்பாளர் சபை போதகர். சபை போதகர் இவ்வூழியத்தில் தரிசனம் இல்லாதவராக இருப்பின் சிறுகுழு ஊழியத்தை அவரது சபையில் செயல்படுத்தாமலிருப்பது நல்லது. சபை போதகர் இந்த ஊழியத்தில் முக்கிய பணியாற்றி, பயிற்சி வகுப்புகளை நடத்துவதுடன், சிறு குழுக்களை ஆரம்பித்து பராமரிக்க நல்ல தலைவர்களை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு வாரமும் அதன் தலைவர்களிடம் தொடர்பு கொண்டு குழுக்களின் நடவடிக்கைகளை கேட்டறிய வேண்டும். அவர்களின் குழு அறிக்கைகளையும், காணிக்கைகளையும் வாரா வாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். வாய்ப்பு கிட்டும் பொழுதெல்லாம் குழு தலைவர்களையும் அங்கத்தினர்களையும் சந்தித்து உற்சாகப்படுத்த வேண்டும். மாதம் ஒரு முறை சிறு குழு தலைவர்களின் கூட்டத்தை தவறாமல் கூட்டி, குழுக்களின் நடைமுறை பிரச்சினைகளை கேட்டறிவதுடன் அதற்கான தீர்வையும் பரித்துரைக்க வேண்டும்.

சிறு குழு ஊழியத்தில் போதகரின் தனிப்பட்ட முயற்சி

சிறு குழு ஊழியத்தை சபையில் அறிமுகப்படுத்து முன் போதகர் தன்னை இவ்வூழியத்திற்காக தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

1. சிறு குழுவைக் குறித்த அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்வது மிக அவசியம்.

சிறு குழுவைக் குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். இவ்வாராய்ச்சியை வேதத்திலிருந்து தொடங்கி, இது சம்பந்தமான புத்தகங்களை வாசிப்பது நல்லது. சிறு குழு கருத்தரங்குகளிலும், பயிற்சி வகுப்புகளிலும் கலந்து கொண்டு அதன் பிரசுரங்களை வாசிப்பதின் மூலமும் சிறுகுழு ஊழியத்தை குறித்த அறிவை பெருக்கிக் கொள்ளலாம்.

2. சிறு குழுவைக் குறித்த தரிசனம் தேவை

தரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள் (நீதிமொழிகள் 29:18). சிறுகுழுவை குறித்த தரிசனம் இல்லாத போதகர்கள் இவ்வூழியத்தில் தங்களை வளர்த்துக் கொள்ளவும் முடியாது. சபையையையும் வளர்க்க முடியாது. தங்கள் வாழ்வில் தோன்றும் தரிசனங்களை சிந்தித்து அதிலுள்ள நிறை குறைகளை சீர்தூக்கிப் பார்த்து சரி செய்ய வேண்டும்.

ஒரு கம்யூனிஸ்ட் நண்பர் இவ்வாறு சொன்னார். "எனக்கு 24 மணி நேரம் ஒரு நாளில் உண்டு. அதில் 8 மணி நேரத்தை என் கட்சிக்காக உழைக்கிறேன். 8 மணி நேரத்தில் என் கட்சிக்காக சம்பாதிக்கிறேன். மீதமுள்ள 8 மணி நேரத்தை என் கட்சியைக் குறித்து கனவு காண்கின்றேன்" என்றார். நாம் நம் சபையைக் குறித்து இவ்வாறு சொல்ல முடியுமா?

உலகிலுள்ள பெரிய சபைகளெல்லாம் சிறு குழு ஊழியத்தின் மூலம் வளர்ச்சியடைந்தவை. எட்டு லட்சம் பேரை அங்கத்தினராக் கொண்ட சீயோலிலுள்ள பால்யங்கி சோ வின் சபை 1500 சிறு குழுக்களைக் கொண்டது. அதன் வளர்ச்சி சிறு குழு ஊழியத்தின் மூலம் என்பதை மறுக்க முடியாது. சென்னையிலுள்ள 20 ஆயிரம் அங்கத்தினர்களைக் கொண்ட New Life Assembly சபையின் வளர்ச்சிக்கு சிறு குழு ஊழியம் அஸ்திபாரமாக உள்ளது.

தென் அமெரிக்காவிலும், பிரேசிலிலும் உள்ள சபைகளின் பெரு வளர்ச்சிக்கு காரணம் சிறு குழு ஊழியம் தான் என்பது உங்களுக்கு தெரியுமா?

இனிமேல் இந்த சபையை வளர்க்கவே முடியாது என்று தீர்மானித்த சபைகளெல்லாம் இச்சிறு குழு ஊழியத்தின் மூலம் உயிர் மீட்சி பெற்ற சரித்திரம் ஏராளமுண்டு. அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நெருக்கப்படு கின்ற இக்காலக்கட்டத்தில் இவ்வூழியத்தை விட சிறப்பான ஊழிய திட்டம் சபை வளர்ச்சிக்கு வேறு எதுவும் இருக்க முடியாது. உங்களது சபையும் இவ்வூழியத்தின் மூலம் எழுச்சியடையும் என்பது திண்ணம். ஏனெனில் இது வேதத்தை அடிப்படையாக கொண்டது.

3. சிறு குழு ஊழியத்தின் சிறப்பம்சங்களையும், அதன் நன்மைகளையும் உங்கள் சபை விசுவாசிகளிடமும், சபையின் தலைவர்களிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஆபகூக் 2:2 கூறுவதைக் கேளுங்கள் "நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளில் தீர்க்கமாக வரை என்று கூறுகின்றது. இந்த வசனத்தில் இரண்டு காரியங்கள் சொல்லப்படுகின்றன.

முதலாவதாக தரிசனத்தை பலகைகளில் தீர்க்கமாக வரைய வேண்டும். உன் சிறுகுழு ஊழிய தரிசனத்தை உறுதிப்படுத்து என்று தீர்க்கதரிசி உரைக்கிறார். இதற்காக ஜெபிக்கலாம். மற்ற தேவனுடைய பிள்ளைகளிடத்திலே இதைக் குறித்து பேசலாம்.

இரண்டாவதாக, அதை வேகமாக ஓடுகிறவன் கூட வாசிக்கின்ற வகையில் பெரிய எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். இதென்னவெனில் உங்கள் தரிசனங்களை சபை மக்களிடம் பிரசங்கங்கள் மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், உங்கள் அன்றாட பேச்சுகளின் மூலமாகவும் பேசிக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதே.

தேவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்றார். கிறிஸ்து பரமேறு முன் நீங்கள் உலகம் முழுவதும் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்றார். அதன் அர்த்தம் என்ன? உங்கள் ஊழியத்திற்கு உதவியாக ஒரு கூட்டத்தை சேர்க்க வேண்டும். உன் தரிசனத்தை சபையின் முக்கிய விசுவாசிகளிடம் பேசு; அவர்களை உன் தரிசனத்தில் ஈடுபடுத்து அல்லது ஊக்குவி. இச்சிறு குழு ஊழியத்தின் நன்மைகளையும் சரித்திர உண்மைகளையும் எடுத்துச் சொல். சபை மக்களின் பார்வை அதிகம் படக்கூடிய இடங்களில் சிறுகுழு ஊழியத்தைக் குறித்த விபரங்கள் அடங்கிய பலகைகளை எழுதி வை.

4. சிறு குழு ஊழியத்தில் நீங்களே ஒரு முன் மாதிரியை ஏற்படுத்துங்கள்.

நம்முடைய வாயின் வார்த்தைகளைக் காட்டிலும் செயல்கள் அதிகம் பேசும் வல்லமை படைத்தது. ஆகவே நீங்கள் சபையின் முக்கிய விசுவாசிகளைக் கொண்டு சிறு குழுவை ஆரம்பியுங்கள். இவ்வூழியத்தில் அநேகரை ஈடுபடச் செய்து அவர்களுக்கு சிறு குழு ஊழிய பயிற்சியளியுங்கள். அக்காலக் கட்டங்களில் வேதத்தில் ஊழியத்தைக் குறித்து சொல்லப்படுகின்ற பகுதிகளையும், சிறு குழு ஊழியத்தைக் குறித்து எழுதப்பட்ட புத்தகங்களையும் வாசிக்க ஊக்கப்படுத்துங்கள். அவர்களின் ஊழியத்தை உற்சாகப்படுத்துகின்ற அதே வேளையில் அவர்களின் நிறை குறைகளை எடுத்துக் கூறி, பூரண சீஷர்களாக மாற்றுவது போதகரின் கடமையாகும்.

சிறு குழு ஊழிய தலைவர்களை தேர்ந்தெடுப்பது எப்படி?

தேவனுடைய ஊழியத்திற்கு தலைவர்களை தேர்ந்தெடுப்பதைக் குறித்து வேதம் அநேக ஆலோசனைகளை கூறுகின்றது.

கிறிஸ்து தலைவர்களை தேர்ந்தெடுத்த விதத்தை பாருங்கள்.

1. அறுவடையிலிருந்து தலைவர்களை தேர்ந்தெடுத்தார் (From the Harvest) மத்தேயு 4:18-22 இரட்சிக்கப்பட்ட சாதாரண மக்களிடமிருந்து ஊழியத்திற்கு சீஷர்களை தேர்ந்தெடுத்தார்.

2. வல்லமையான தலைவர் பயிற்சி - வாழ்க்கையின் அன்றாட சம்பவங்களின் மூலம் அப்பயிற்சியை கிறிஸ்து அளித்தார். (Role Model) மத்தேயு 4:23, 9:35,36 பயிற்சி போதனையும், ஊழிய சாட்சிகளின் மூலம் தனது ஊழிய தலைவர்களை உருவாக்கினார்.

3. வேலையோடுக் கூடிய பயிற்சியை இயேசு அவருடைய சீஷர்களுக்கு கொடுத்தார் (Job Ministry Assignments) மத்தேயு 10:1-5.

4. அதிகாரத்தை தம்முடைய பின்னடியார்களுக்கும், சீஷர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார் (He gave the power) மத்தேயு 28:19-20.

சிறு குழு தலைவர்களை தேர்ந்தெடுக்கு முன்பு சில அடிப்படை காரியங்களை அவர்களிடம் காண முயற்சிப்பது மிகவும் நல்லது. ஆனால் இதற்கு முன்பு அதிகமாக போதகர் ஜெபிக்க வேண்டும். கிறிஸ்துவும் கூட 12 சீடர்களை தேர்ந்தெடுக்கும் முன்பு அதிகமாய் ஜெபித்தார். கீழே குறிப்பிடுகின்ற இந்த நான்கு குணாதிசயங்கள் உள்ளனவா என்பதை சோதித்தறிய வேண்டும்.

FAST Principle **ன் அடிப்படையில் தலைவர்களை தேர்ந்தெடுக்கலாம்**

1. உண்மை – உத்தமம் (Faithfullness)

பழைய ஏற்பாடடில் தேவன் ஆசாரியர்களை அவர்களின் உண்மை உத்தமத்தின் அடிப்படையில் தான் ஊழியத்திற்கு அழைத்தார், (1 சாமுவேல் 2:35). கிறிஸ்து பவுலை அழைக்கும் போதும் இக்குணத்தை கண்டார் (1 தீமோத்தேயு 1:12). தேவன் ஊழியத்திற்கு அழைத்த எல்லாரிடத்திலும் அப்படிப்பட்ட குணம் காணப்பட்டது. இக்குணத்தை கண்டறிய கீழ்க்கண்ட கேள்விகளை போதகர் அவருடைய சபை விசுவாசிகளிடம் எழுப்பி பதிலை தேட முயற்சிப்பது நல்லது.

- ✦ தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் தன்னுடைய குடும்பம், மனைவி, பிள்ளைகளை, எப்படி நடத்துகின்றார்?

- உண்மையைத் தாமாகக் கடைப்பிடிக்கின்றாரா?
- சபையிலும், மக்களிடத்திலும் ஏற்படும் சிறுபிரச்சனைகளை மற்றும் அறிவின் பிரச்சனைகளை உதவி தேவைப்படும்போது முன் வந்து உதவி செய்யக் கூடியவரா?
- அவருடைய நண்பர்களும், அயலகத்தாரும் இவரைத் நேர்மையானவர், நம்பிக்கைக்குரியவர் என்று கூறுவார்களா?
- ஊழியத்தை சோர்வின்றி செய்யக்கூடியவரா?
- உண்மையுள்ளவரா? (லூக்கா 16:1-13)

2. சிறு குழு ஊழியத்தை செய்ய அவரால் நேரம் ஒதுக்க முடியுமா? (Availability)

நாம் ஊழியத்திற்கு தேர்ந்தெடுக்க விரும்பும் நபர் தேவனுடைய ஊழியத்திற்கு முன்னுரிமை கொடுப்பவரா அல்லது லூக்கா 14ல் அதிகாரத்தில் கூறுவது போல சில உலகப்பிரகாரமான சாக்கு போக்குகளை சொல்பவரா? நாம் தேர்ந்தெடுக்கும் தலைவர்கள் தங்களது அன்றாட பணிகளுக்கு மத்தியிலே ஆண்டவருக்கு சிறிது நேரம் ஒதுக்க விருப்பமுள்ளவராக இருப்பது மிக மிக அவசியம்.

3. தாழ்மையுள்ளவரா? Submission

நாம் தேர்ந்தெடுக்கும் சிறு குழு தலைவர் தேவனுக்கும், அவரின் சபைக்கும் அதன் அமைப்புக்கும் கீழ்ப்படிபவரா? சபைக்கும் அதன் தலைவர்களுக்கும் கீழ்படிதல் என்பது கிறிஸ்தவ ஜீவிய முதிர்ச்சியின் அடையாளமாகும். சில நேரங்களில் அவர்களுக்கு சாதகமான சூழ்நிலை இல்லாதபோதும் கீழ்படியக் கூடியவரா? எபிரெயர் 13:17ல் கூறுவது போல சந்தோஷத்தோடே கீழ்படியக் கூடியவரா?

4. போதிக்கப்படக் கூடியவரா? (Teachbility)

தாழ்மையின் வெளிப்படையான மற்றொரு அடையாளம் கற்றுக் கொள்ளுதல். போதகரும் மற்ற தலைவர்களும் சொல்லுகின்ற நல்ஆலோசனைகளைக் கேட்பவரா? அவர் மற்றவர்கள் மூலம் கற்றுக் கொள்ளும் நற்காரியங்களை பொறுமையாய் மற்றவர்களிடம் போதிக்கக் கூடியவரா?

மேற்குறிப்பிட்ட குணாதிசங்களைக் கொண்ட தலைவர்களை தேர்ந்தெடுத்து அவர்களிடம் அவர்களிடம் போதகர் என்ற முறையில்

1. **நல்ல உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.**

திறமையுள்ள தலைவர்களை அடையாளம் கண்டு கொண்டு பின், அவர்களோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும். அடிக்கடி அவர்களுடைய இல்லத்துக்கோ அல்லது வேலை தளத்துக்கோ சென்று உறவை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அக்கால கட்டங்களில் ஊழியத்திற்கடுத்த தனிப்பட்ட உறவு, உண்மையானதாக இருக்க வேண்டும். பவுல் அப்போஸ்தலன் கூறுவதைக் கேளுங்கள். உங்களிடத்தில் பட்சமாய் நடந்து.... பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளையை காப்பாற்றுகிறது போல, நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து.. நங்கள் எங்களுக்கு பிரியமானபடியினால் எங்கள் ஜீவனையும் உங்களுக்கு கொடுக்க மனதாயிருந்தோம் (1தெச 27:8).

2. **குழுவின் நடவடிக்கைகளிலும், சிறு குழு பயிற்சிகளிலும் கலந்துக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.**

நற்குண சாட்சிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களை உஙக்ளோடு இவ்வூழியத்தில் பங்கு பெற அழைப்பு விடுங்கள். அவர்களை சிறு குழு ஊழியத்தில் குழு ஈடுபாடு காண்பிக்க ஊக்கப்படுத்துங்கள். இதை ஊக்குவிக்கும் வேலையில் , போதகர் தான் திட்டமிடுகின்ற காரியங்களிலும், ஊழியங்களிலும் இவர்களோடு கலந்து ஆலோசித்தால் அந்த ஈடுபாடு தானாகவே வரும்.

3. **ஊழிய பொறுப்புகளை இவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

உங்களோடு ஊழியத்தில் பங்கு பெறும் போது சில பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளுதல் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை ஊழியத்தில் வளருவதற்கு பேருதவியாக இருக்கும். சபை வரலாற்றில் ஊழிய பயிற்சி கொடுத்த முறையை பாருங்கள்.

நான் செய்கிறேன் - நீ கவனி

நாம் சேர்ந்து செய்வோம்

நீ செய் - நான் கவனிக்கிறேன்

நீ செய் - மற்றவர்கள் கவனிக்கட்டும்

உன்னையே பெருக்கிக் கொள்

ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த தலைவர்களை போதகர் பயிற்றுவிக்க வேண்டும். இதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றுங்கள்.

- உங்கள் ஊழியத்தையும் அதிலே நீங்கள் பின்பற்றும் வழிமுறை களையும் சிறு குழு ஊழியத்திற்கு தேர்ந்தெடுத்த தலைவர்களை கவனிக்கச் சொல்லுங்கள். நீங்கள் எப்படி, ஏன் செய்தீர்கள் என்று விளக்குங்கள்.
- அவர்கள் ஊழியத்திற்கு தேவைப்படும் உபகாரணங்களை (Books, Resources) பெற உதவி செய்யுங்கள்.
- சிறு குழு ஊழியத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் என்ன என்பதை அவர்களிடம் விளக்கி கூறுங்கள்.
- கொடுத்த பொறுப்புகளை முழுமையாய் நிறைவேற்ற நீங்கள் வகுத்திருக்கும் வழி முறைகளை அவர்களிடம் விளக்கி காண்பியுங்கள்.
- அவர்களுடைய ஊழிய உற்சாகத்தையும் வளர்ச்சியையும் கவனியுங் கள்.
- பயிற்சியில் உள்ள தலைவர்கள் ஏதேனும் சிறு தவறு செய்தால் மன்னித்து பொறுத்து ஏன் தவறுகள் நடந்தது என்பதை விளக்கிச் சொல்லுங்கள். முடிந்தால் மறுபடியும் சிறு பயிற்சி கொடுங்கள்.
- செயல்படுத்தின காரியங்களையும் அதன் நிறைவேறுதலையும் சோதித்துப் பார்த்து அதன் நிறை, குறைகளை விளக்கி காண்பியுங்கள்.
- ஊழிய பொறுப்புகளை பகிர்ந்து கொடுத்து அவர்களை ஆசீர்வதியுங் கள்.

சிறு குழு தலைவர்களின் ஊழிய பொறுப்புகள்

ஒரு பகுதியில் சிறு குழுவை ஆரம்பிப்பிதற்கு இரண்டு முக்கிய தலைவர்களை போதகர் ஏற்படுத்த வேண்டும். அவர்கள் தலைவர் மற்றும் உப தலைவர். சிறு குழு தலைவரின் ஊழிய பொறுப்புகள் போதகருடைய நேரிடையான ஆலோசனையின் பேரில், தலைவர் சிறு குழு கூட்டங்களை

நடத்த இடத்தை தேர்வு செய்ய வேண்டும். அத்துடன் குழுவை வழி நடத்துபவராகவும், குழு அங்கத்தினர்களின் நன்மதிப்பை பெறுபவராகவும் செயல்பட வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட சிறு குழுவின் இலக்கையடைய வாரா வாரம் அச்குழு அங்கத்தினர்களை சந்தித்து அவர்களின் ஆவிக்குரிய தேவைகளை பூர்த்தி செய்து உற்சாகப்படுத்த வேண்டும். குழுவின் அறிக்கையை ஒவ்வொரு வாரமும் தவறாமல் போதகருக்கு அனுப்ப வேண்டும்.

சிறு குழு உதவி தலைவரின் ஊழிய பொறுப்புகள்

தலைவர் இல்லாதபோது உதவி தலைவர், சிறு குழுக் கூட்டத்தை நடத்த முன் வர வேண்டும். புதிய அங்கத்தினர்களை குழுவுக்கு சேர்ப்பதிலும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற அங்கத்தினர்களை அன்போடு உபசரித்து தொடர்ந்து கூட்டங்களில் கலந்துக் கொள்ள உற்சாகப்படுத்த வேண்டும். குழுவின் தலைவரோடு இணைந்து பணியாற்றி குழுவின் இலக்குகளையடைய ஒத்துழைப்பதுடன், தலைவர்களின் ஊழிய பணிகளை கண்காணித்து, கற்றுக் கொண்டு எதிர்காலத்தில் சிறு குழுக்களை ஆரம்பிக்க தன்னை தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உதவி தலைவர் சிறுகுழு கூடும் இடத்திற்கு முன்பதாகவே வந்திருந்து பாடல் புத்தகம், வேதப் புத்தகம், குடி தண்ணீர், உட்காரும் ஆசனங்கள் ஆகியவற்றை ஆயத்தம் செய்து குழு கூட்டத்திற்கு மக்கள் வரும் போது அவர்களை உபசரிக்க வேண்டும். சிறு குழந்தைகளை பராமரிக்க தானோ அல்லது மற்றவர்கள் மூலமாகவோ கூட்டத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சிறு குழுவை ஆரம்பிக்க இடம் தேர்வு செய்தல்

நட்புறவு பெயர்ப் பட்டியல் தயாரானவுடன் சிறு குழு ஆரம்பிப்பதற்கான இடத்தை தெரிவு செய்ய வேண்டும்.

- கண்டிப்பாக சபையில் சிறு குழுக்கள் நடத்தக்கூடாது.
- வீடுகளிலோ, பொது கட்டிடங்களிலோ, பூங்காக்களிலோ சிறு குழுகூட்டங்கள் நடத்தலாம்.
- கூட்டம் நடைபெறும் இடங்கள் மிகுந்த இடையூறு இல்லாத இடங்களாகவும், போதுமான காற்றோட்ட வசதியுடன் கூடியதாகவும் இருந்தால் நல்லது.

+ ஒன்றிற்கும் மேற்பட்ட அறைகள் இருப்பின், குழந்தைகளை பராமரிக்க மற்ற அறையை பயன்படுத்தலாம்.

+ குறைந்த பட்சம் 10 பேராவது தாராளமாக உட்காரக் கூடிய இடமாக இருத்தல் நல்லது.

+ உட்கார நாற்காலிகளோ, ஆசனங்களோ இல்லாத இடங்களில் தரையில் விரிப்புடன் உட்கார்ந்து கூட்டத்தை நடத்தலாம்.

சிறு குழுவிற்கு அங்கத்தினர்களை அழைப்பது எப்படி?

+ நட்புறவு பெயர்ப் படடியலில் உள்ளவர்களை நேரிடையாக சென்று அழைப்பது மிகவும் நல்லது. அவ்வாறு முடியவில்லையெனில் தொலைபேசி மூலமாகவும் நாமே கைப்பட எழுதுகின்ற கடிதம் மூலமாகவும் அழைக்கலாம்.

+ சபையின் விருந்தினர் புத்தகத்தின் மூலம் பெயர் விலாசம் கண்டுபிடித்து சிறு குழு கூட்டத்திற்கு அழைக்கலாம்.

+ இரண்டு அல்லது மூன்று நாட்கள் எழுப்புதல் கூட்டங்களை நடத்தி விலாசங்கள் பெற்று சிறு குழுவில் அங்கத்தினர்களை சேர்க்கலாம்.

+ வேதம் கற்றுக் கொள்ளவேண்டும் என வாஞ்சையுள்ளவர்களையும் அடையாளம் கண்டு அழைக்கலாம்.

+ வியாதி, மரணம், வியாபார நஷ்டம், போன்ற தேவையுள்ள மக்களை சந்தித்து ஜெபிக்க சிறுகுழுவிற்கு அழைக்கலாம்.

மக்கள் சத்தியத்திற்கு செவி கொடுக்கும் மனநிலை அட்டவணையை பார்க்கவும்.

சிறு குழு கூட்டங்கள்

+ சிறு குழுக்கூட்டங்களை வாரம் ஒரு முறை நடத்தலாம்

+ கூட்ட நேரம் 1 மணி நேரத்திலிருந்து 1 மணி 15 நிமிடங்களுக்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குழு உறுப்பினர்கள் வட்டமாக உட்காருதல் வேத கலந்துரையாடலில் பங்கு கொள்ள மிக்க ஏதுவாயிருக்கும். சாப்பாட்டு மேஜை, வீட்டு வரவேற்பறைகள் இச்சூழ்நிலையை உருவாக்கும்.

வேத பாடங்கள் எளிமையாகவும், அதே வேளையில் கலந்துரையாடலா கவும் இருக்க வேண்டும். குழு தலைவர் மற்றும் அங்கத்தினர்கள் அனைவரும் கலந்துரையாடலாக ஈடுபடக்கூடிய விதத்தில் கேள்விகளை கேட்டு வேத பாடத்தை சொல்லிக் கொடுக்கலாம்.

வேத பாடம் முடிந்தவுடன் சிறிது நேரம் அந்நாளின் வேத பாடம் அவர்களின் வாழ்க்கைக்கு எவ்வளவு பிரயோஜனமாக இருந்தது என்ற உரையாடலோடு முடிக்க வேண்டும்.

ஒவ்வொரு வேதபாட முடிவிலும் தலைவர் குழு அங்கத்தினர்களை தற்பிரதிஷ்டையுடன் ஜெப உடன்படிக்கைக்கு அழைப்பது நல்லது.

வேத பாடங்கள் எளிய முறையில், குறிப்பிட்ட தலைப்பில் மாத்திரம் ஒவ்வொரு நாளும் போதிப்பது நல்லது. பல தலைப்புகளை ஒரே நேரத்தில் போதிப்பது நல்லதல்ல.

குழுவில் அதிகபட்ச அங்கத்தினர்கள் 15 பேருக்கு மிகாமல் இருக்கவேண்டும். அதற்கு மேல் அங்கத்தினர்கள் வருவார்களாயின், உதவி தலைவரைக் கொண்டு மற்றொரு சிறு குழு ஆரம்பிக்கப்பட வேண்டும். அது இக்கூட்ட இடத்திற்கு அருகிலேயே இருந்தாலும் தவறில்லை.

சிறு குழு கூட்டம் நான்கு பகுதிகளாக நடத்தப்படவேண்டும். (Four W'S)

1. **வரவேற்பு (Welcome).** இப்பகுதியில் வரவேற்பு, இணைத்தல் Ice Breaker ஆரம்ப ஜெபம் அடங்கும்.

2. **ஆராதனை (Worship).** இப்பகுதியில் பாடல், வேத வசனம் வாசித்தல், ஜெபம் மற்றும் சாட்சிகள் அடங்கும்.

3. **வசனம் (Word).** இது வேத வசனம் தியானிப்பதை குறிக்கும். சிறுகுழுவில் வேதபாடத்தை நடத்துவதற்கு யாரும் ஆசிரியரில்லை. ஆனால் வகுப்பை நடத்துவதற்கு ஒருங்கிணைப்பவர் Facilitator உண்டு. இவர் வகுப்பிலுள்ள அனைவரும் பங்கு பெறும் வகையிலும், அனைவரும் வேத வசனத்தை புரிந்துக் கொள்ளும் வகையிலும் வழி நடத்த வேண்டும். அன்றைய தினம் படித்த வேத வசனங்கள் சிறு குழு அங்கத்தினர்களின் வாழ்க்கையுடன் ஒப்பிடப்படவேண்டும். அவ் வசனங்கள் அவர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், அங்கமாகவும், மாறுவதற்கு ஊக்குவிக்கவேண்டும்.

4. **சாட்சி ஊழியம் (Witness).** சிறுகுழுவின் நோக்கமே சபை பெருக்கம். ஆகவே சிறுகுழு வகுப்புகளின் அதன் அங்கத்தினர்களுக்கு ஊழிய தாகத்தை ஒவ்வொரு வகுப்பிலும் ஏற்படுத்த வேண்டும். சிறு குழுவில் வேத பாடம் கற்று தேரும் ஒவ்வொரு உறுப்பினரும் ஊழியம் செய்வதில் தேர்ந்தவர்களாக விளங்க வேண்டும்.

சிறு குழு கூட்டங்கள் ஐந்து மிக முக்கியமான நோக்கங்களை நிறைவேற்றுபவையாக இருக்க வேண்டும்.

1. தேவனுக்கும் கூடுகின்ற மக்களுக்கும் உறவை ஏற்படுத்துகின்றதாக இருக்க வேண்டும். தேவன் ஒரு மனிதனை தொடும்போது அவனுடைய வாழ்வில் என்ன மாற்றம் ஏற்படும் என்பதை தெளிவுபடுத்தும் கூடுகையாக இருத்தல் அவசியம்.

2. கூடுகின்ற மக்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவை பெலப்படுத்துபவையாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனின் வாழ்க்கையில் கிரியை செய்யும் போது ஏற்படுகின்ற மாற்றத்தை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.

3. கூடுகின்ற நபர்களுக்கு உறவை பெலப்படுத்துபவையாக இருக்க வேண்டும். ஆவியில் உறவுகள் வளர்ந்து, பெலப்பட்டு கூடுகின்ற நபர்கள் ஐக்கியப்படவும், கரிசனையோடு மற்றவர்களுடைய தேவைகளை சந்திக்கவும், பிறர் தவறுகளை மன்னிக்கவும், ஜெபிக்கவும் கூடிய சூழ்நிலைகளை சிறுகுழு கூட்டங்கள் உருவாக்க வேண்டும்.

4. கூடுகின்ற நபர்களுக்கும் கிறிஸ்துவை அறியாத வெளி உலக மக்களுக்கும் தொடர்பை உருவாக்குபவையாக இருக்க வேண்டும். ஆவியில் உறவுகள் வளர்ந்து பெலப்பட்டு, கூடுகின்ற நபர்கள் ஐக்கியப்படவும், கரிசனையோடு மற்றவர்களுடைய தேவைகளை சந்திக்கவும், பிறர் தவறுகளை மன்னிக்கவும். ஜெபிக்கவும் கூடிய சூழ்நிலைகளை சிறுகுழு கூட்டங்கள் உருவாக்க வேண்டும்.

5. கிறிஸ்துவின் சுவிசேஷ கட்டளைக்கு கீழ்படிந்து அவருடைய சத்தியத்தை, அவரை அறியாத மக்களுக்கு அறிவித்து அவர்களை தேவனிடத்தில் வழிநடத்த வேண்டும். ஆத்தும ஆதாயத்தில் முழு மூச்சாய் ஈடுபடாத சிறு குழுக்கள் சிறந்த குழுக்களாக இருக்க முடியாது. சிறு குழுவின் இலக்கே ஆத்தும ஆதாயம் தான்.

ஒவ்வொரு சிறு குழுக் கூட்டங்களிலும் ஆதித்திருச்சபையில் காணப்பட்ட அனைத்து குணாதிசயங்களும் தவறாமல் காணப்பட வேண்டும்.

அப்போஸ்தலர் 2	குழுவின் செயல்பாடுகள்
அப்போஸ்தல உபதேசம்	வேத பாடம்
ஐக்கியம்	மக்களின் நெருங்கிய உறவு மற்றும் ஒருவருக்கொருவர் செய்யும் உதவி மனப்பான்மை
ஜெபம்	ஜெபவேளை
அப்பம் பிட்குதல்	ஆராதனை விருந்து மற்றும் உபசரிப்பு
சகலத்தையும் பொதுவாய் அனுபவித்தார்கள்	குழு அங்கத்தினர்களின் தேவைகளை சந்தித்தல்
ஜனங்கள் சபையில் சேரத்துக் கொள்ளப்பட்டார்கள்	சுவிசேஷ வெளி ஊழியம்

ஒவ்வொரு குழுக்களும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துகின்ற, கற்றுக்கொள்கின்ற, அங்கத்தினர்களை பெருக்க திட்டமிடுகின்ற, வெளி ஊழியங்களை செயல்படுத்துகின்ற, ஜெபிக்கின்ற குழுக்களாக இருத்தல் மிக மிக அவசியம்.

நான் கீழே குறிப்பிடுகின்ற சிறு குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரல் ஒரு ஆலோசனை மாத்திரமே, நீங்கள் குழுக்கள் நடத்தப்படும் இடத்திற்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ப மாற்றிக் கொள்ளலாம். ஆனால் நிகழ்ச்சி நிரல்கள் அனைத்தும் சிறுகுழுக் கூட்டத்தில் இடம் பெறவேண்டும்.

நிகழ்ச்சி நிரல் – மொத்தம் 1 மணி 15 நிமிடங்கள்

பாடல்	7 நிமிடங்கள்
அறிமுகம் மற்றும் வரவேற்பு	5 நிமிடங்கள்
உற்சாக நிகழ்ச்சி	3 நிமிடங்கள்
சாட்சி	7 நிமிடங்கள்
வேத பாடம்	20 நிமிடங்கள்
வேத பாடம் பிரதிபலிப்பு	10 நிமிடங்கள்
விசேஷ ஜெபம்	5 நிமிடங்கள்
அறிவிப்புகள்	3 நிமிடங்கள்
உபசரிப்பு	1 மணி 15 நிமிடங்கள்
மொத்தம்	75 நிமிடங்கள்

7

சிறு குழு தொடர் ஊழியர்கள்

1. பதினைந்து அங்கத்தினர்களுக்கு அதிகமாக ஒரு குழுவில் வாரா வாரம் கூடுவார் களென்றால் மற்றொரு குழு ஆரம்பிக்கப்படவேண்டும்.

2. பத்து சிறுகுழுக்களுக்கு மேலாக ஒரு சபையில் நடைபெற்றால் வட்டார தலைவரை Sectional Leader ஏற்படுத்தி குழுக்களை கண்காணிக்க நியமிக்க வேண்டும்.

3. 50 க்கும் மேலாக குழுக்கள் ஒரு சபையில் நடைபெற்றால் மண்டல தலைவரை Divisional Leader ஏற்படுத்த வேண்டும்.

4. பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற அதே வேளையில் ஒருங் கிணைப்பு Co-ordination மிக அவசியம். எல்லா மட்டத்திலும் தலைவர்களின் அறிக்கைகள் பெறப்பட்டு, குழுக்களின் செயல்பாட்டை நன்கு கண்காணிப்பதுடன், குழுக்களின் தேவைகளை சந்தித்து அவைகள் நலிவடையாமல் பார்த்துக்கொள்ள போதகரும், எல்லா மட்ட தலைவர்களும் மிக விழிப்புடன் செயல்பட வேண்டும்.

சிறு குழு ஊழியத்தின் நான்கு படிகள்

சிறு குழு ஊழியம் காலத்தின் சீதோஷ்ண நிலையைப் போலவே பல பகுதி களை கொண்டது. காலத்துக்கு காலம் சீதோஷ்ண நிலை மாறுவதைப் போல சிறு குழு கூட்டங்களின் வளர்ச்சி நிலையும் மாறிக்கொண்டேயிருக்கும். ஆகவே இந்நிலைகளை ஏற்ற காலத்தில் கண்காணித்து, அதன் நடவடிக்கைகளையும், பயிற்சிகளையும் ஏற்றவிதமாக நடத்தி குழுவின் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும்.

1. அறிமுக காலம் (Getting Acquinted Stage)

இது குழு ஆரம்பிக்கப்பட்ட காலம். இக்காலத்தில் குழுவின் அங்கத்தினர்கள் மிகவும் உற்சாகத்துடனும் என்ன நடக்கப்போகின்றது என்ற ஆவலுடனும்,

எதிர்பார்ப்புடனும் கூடுகின்ற நேரம். அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் சந்தித்து உறவை ஏற்படுத்துகின்ற காலம். குழு அங்கத்தினர்கள் தனித்தனியாக கூட்டத்திற்கு வந்தவர்கள் நண்பர்களாக மாறுகின்ற காலம்.

குழு தலைவர்கள் இக்காலக்கட்டத்தில் சாட்சிகள், பொழுது போக்கு நடவடிக்கைகள், குழு ஐக்கிய உணவு, பிக்னிக் போன்றவைகளை நடத்துவதின் மூலம் குழு அங்கத்தினர்களின் உறவு பெலப்படும். குழுவின் கூடுகை நேரம், நிகழ்ச்சிகள், கூடுகையின் நோக்கம் ஆகியவற்றை தெளிவாக அறிவித்து குழுவை வளர்க்க வேண்டும்.

2. எதிர்படுகின்ற காலம் (Conflict Stage)

இது மிகவும் இக்கட்டான காலம். இக்காலங்களில் குழு அங்கத்தினர்களின் தனிப்பட்ட கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் ஒன்றுக்கொன்று ஒவ்வாத நிலையை கண்டு கொள்ளும் காலம். இதினிமித்தம் அங்கத்தினர்கள் இரண்டு நிலையை எடுப்பர். ஒன்று மற்றவர்களுடன் ஒத்துப்போவார்கள் அல்லது குழுவைவிட்டு விலகுவார்கள். இக்காலத்தில் நண்பர்கள் என்ற நிலையிலிருந்து ஒரே குடும்பமாக உணர்வுகள் சங்கமிக்கும்.

இக்காலக் கட்டத்தில் குழுவின் தலைவர்கள் ஒவ்வொரு சிறு குழு அங்கத்தினர்களையும் தனித்தனியாக சந்தித்து அவர்களின் சந்தேகங்களையும் குறைகளையும் கேட்டறிந்து அவற்றை நீக்க முயல வேண்டும். மேலும் குழு அங்கத்தினர்களை ஆலோசித்து தீர்மானங்கள் எடுப்பது, உற்சாகமான சிறு குழுக்கூட்டங்கள் போன்றவை இந்த எதிர்படுகின்ற காலங்களில் அங்கத்தினர்களிடையே காணப்படும் குறைகளை தீர்க்க உதவும்.

3. சமுதாய காலம் (Community Stage)

இக்காலக்கட்டத்தில் குழு அங்கத்தினர்களின் உறவுகள் பெலப்பட்டு, ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒரு சமுதாயமாக, குடும்பமாக உருவாகின்ற காலம். தனிப்பட்ட குழு அங்கத்தினர்களின் தரிசனங்கள் அல்லது விருப்பங்கள் யாவும் குழுவின் தரிசனங்களாக மாறி அதன் இலக்கை அனைவருமாக கூடி நிறைவேற்றுகின்ற காலக்கட்டம். இக்காலக்கட்டத்தில் தலைவர்கள் குழுவின் அங்கத்தினர்களை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு ஊழியம் செய்ய ஊக்குவிக்க வேண்டும். மருத்துவமனை சந்திப்புகள், பத்திரிக்கை விநியோகம், கிறிஸ்துவை அறியாத மக்களை சந்தித்து தேவைகளை அறிதல், குழுவாக கூடி வேத ஆராய்ச்சி ஆகியவை குழுவின் இலக்கையடைய உதவும்.

4. வெளி உலக மக்களுக்கு ஊழியம் செய்யும் காலம் (Ministering to Others Stage)

சமுதாயத்தில் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சிறு குழு அங்கத்தினர்கள் ஊழியம் செய்யும் காலம். இக்காலக் கட்டத்தில் இரண்டாம் மட்ட தலைவர்கள் அடையாளம் கணாப்பட்டு மற்றொரு குழு ஆரம்பிக்கப்பட முயற்சிகள் எடுக்கின்ற காலம்.

சிறு குழு தலைவர்கள் வெளி ஊழியத்திற்கான உற்சாகத்தை குழு அங்கத்தினர்களுக்கு கொடுப்பதுடன், அதற்கான ஆயுத்தங்களிலும் ஈடுபட வேண்டும். சிறு குழு தலைவர்கள் பயிற்சி கொடுத்த புதிய குழுக்களை ஆரம்பிக்க தலைவர்களையும் நியமிக்க வேண்டும்.

கீழே உள்ள வரைப்படத்தை பாருங்கள் இதுதான் சிறுகுழு ஊழிய பிரயாண சூழ்நிலை.



8

சிறு குழுவின் பெருக்கம்

ஞானஸ்நானத்திற்கு முன்பு

சிறு குழுவில் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து ஞானமுழுக்கு பெறுவதற்கு ஆயத்தமாயுள்ளவர்களுக்கு விசேஷ வகுப்புகள் 2லிருந்து 3 மாதங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும். இதில் வேதத்தின் கருகலான வேத சத்தியங்களாகிய மரணம், பரலோகம், நியாயத்தீர்ப்பு, இரண்டாம் வருகை, [illegible] போன்ற வேத சத்தியங்கள் போதிக்கப்பட்டு, சிறு குழு அங்கத்தினர்கள் மனந்திரும்பி ஞானமுழுக்கிற்கு ஒப்புக் கொடுக்க உதவிசெய்ய வேண்டும்.

ஞானஸ்நானத்திற்கு பின்பு

இது சிறு குழு அங்கத்தினர்களின் மிக கடினமான காலம். அதே வேளையில் முக்கிய காலக்கட்டம். இக்காலக் கட்டத்தில் ஞான முழுக்கு பெற்றவர்களுக்கு அன்பும், அரவணைப்பும் தேவை, ஞானமுழுக்கு பெற்ற பிறபாடு, அவர்களுடைய குடும்பத்திலிருந்தும், நண்பர்கள் வட்டாரத்திலிருந்தும் பலமான எதிர்ப்புகள் தோன்றும். இக்காலக் கட்டத்தில் குழு தலைவர்கள் போதகருடன் இணைந்து, ஞான முழுக்கு பெற்றவர்கள் சோர்ந்து போகாத வண்ணம், சபையில் அவர்களை உற்சாகப்படுத்த முழு முயற்சி எடுக்க வேண்டும்.

ஊழியப்பயிற்சி

இக்காலம் சீஷத்துவ பயிற்சியின் காலம். ஊழிய பாரத்தை இக்காலக் கட்டத்தில் இவர்களுக்கு (ஞானஸ்நானம் பெற்றவர்கள்) ஏற்படுத்துவதுடன், ஊழியத்தின் இரகசியங்களையும் சொல்லித்தர வேண்டும். போதகருடைய தலைமையின் கீழ் இப்பயிற்சி நடைபெற்று, கிறிஸ்துவுக்குள் இவ்விசுவாசிகள் வளர உதவ வேண்டும். சிறு குழு நடத்துவது எப்படி என்ற பயிற்சியும் கொடுக்கலாம்.

தலைமைத்துவ பயிற்சி

சிறு குழு அங்கத்தினர்களுக்கு ஊழிய தலைமைத்துவ பயிற்சி கொடுக்க வேண்டும், தலைவன் என்பவன் யார்? அவன் எப்படி உருவாக்கப்படுகிறான்? அவனிடத்தில் காணப்பட வேண்டிய நற்பண்புகள் யாவை? என்பன போன்ற தலைப்புகளில் பயிற்சி கொடுக்க வேண்டும். இப்பயிற்சிக்கு பின்பு சிறு குழு தலைவர்களிடத்தில் பயிற்சியாளராக அல்லது உதவி தலைவராக இருக்க ஊக்கப்படுத்தவேண்டும்.

முடிவுரை

சபைகள் உலகின் பல பக்கங்களிலிருந்தும் இன்றைய நாளில் நெருக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட இந்த 21 ஆம் நூற்றாண்டு சபைகள் அரசியலாலும், பொருளாதாரத்தினாலும், பிசாசின் பலவித தொந்தரவுகளினா லும் நெருக்கப்படுவதைப் பார்க்கும் போது, ஆதித்திருச்சபையின் உபத்திர வக்கால அனுபவம் வந்துவிட்டது போன்று தோன்றுகின்றது. ஆகவே இன் றைய சபைகள் ஆதித்திருச்சபையின் ஊழிய முறையை அதன் முதன்மை யான முறையாக பின்பற்றி சபை வளர்க்காமல் போனால், கிறிஸ்து வருகின்ற நாளில் அவரின் எதிர்ப்பார்ப்பை நம்மால் முழுமையாக நிறைவேற்ற முடியாது போனாலும் போய்விடும்.

சபைகளின் வளர்ச்சியைக் காட்டிலும், சபைகளின் பெருக்கம் தான் இன்றைய தேவை. உலக மக்கள் தொகையின் பெருக்கத்திற்கு சபை பெருக்கம் தான் சவாலாக இருக்கும். இதற்கு சிறுகுழு ஊழியம் இன்றைய எதிர்பார்ப்பை யும், மக்களின் ஊழியத்தேவைகளையும் முழுமையாக நிறை வேற்றும். இவ்வூழியம் மேலும் சபை மக்களிடையே நிறைவேற்றப்பட தேவன் உதவி

பாடம் 1

தேவன் ஒரு சமுதாயத்தை கட்டுகிறார்

செய்வாராக

செயல் முறை

பாட்டு **10 நிமிடம்**

இணைத்தல் Ice Breaker: ஒருவரையொருவர் குறித்து மூன்று ஆசீர்வாதமான வார்த்தைகளை கூறவும். கைகுலுக்கி ஒருவருக்கொருவர் சிறிய ஜெபம் ஏறெடுக்கலாம்.

சாட்சி (10 நிமிடம்) : இயேசுவை கண்டடைந்த இடம், நேரம், சம்பவம் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக சிலர் (விசுவாசிகளாக இருந்தால்) அதிகபட்சம் 2 நிமிடம் கூறவும்.

ஆரம்ப ஜெபம் : ஒருவர் ஜெபிக்கலாம்

வேத பாடம் : 25 நிமிடம்

அப்போஸ்தலர் : 2:41-47 ஒவ்வொருவரும் ஒவ்வொரு வசனம் வாசிக்கவும்

அப்போஸ்தலர் : 4:32, 33 வாசிக்கவும்

- தேவன் ஒரு சமுதாயமாக இருக்கின்றார், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, தேவ தூதர்கள், மற்ற உலகங்கள், பூமி.
- யாத் 19:5,6ல் தேவன் ஒரு ஜனக்கூட்டத்தாரை கூட்டி இஸ்ரவேல் என்ற சமுதாயத்தை ஏற்படுத்துகின்றார்.
- மாற்கு 3:14,15 கிறிஸ்து இயேசு தம்முடைய சீஷர்கள் மூலம் ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்தினார். அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப் பட்டனர்.

- மேலே வாசித்த அப்போஸ்தலர் 2:42-47லும், அப்போஸ்தலர் 4:32,33லும் தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் இயேசுவின் சமுதாயத்தை தொடர்ந்து கட்டவும், அந்த சமுதாயத்தில் ஜனங்களை கூட்டி சேர்க்கவும் விரும்புகின்றார். அந்த சமுதாயத்தை தேவன் சபை என்று அழைக்கின்றார்.
- அந்த சமுதாயம் தன்னை அழைத்தவருடைய குணாதிசயங்களை வெளிப்படுத்தி வாழ வேண்டும்.
- அவருடைய புண்ணியங்களை மக்களுக்கு அறிவிக்க வேண்டும் (1பேதுரு 2:9)
- யோவான் 17:20 (வாசிக்கவும்) நாம் அனைவரும் சமுதாயமாக, கூட்டமாக கிறிஸ்துவும் பிதாவும் போல ஒன்றாயிருக்க வேண்டும், ஒன்றிணைந்து பிசாசை எதிர்த்து நிற்கவும் தேவன் விரும்புகிறார்.

ஜெபம் இருவர் இருவராக கூடி ஜெபிக்கவும்

அடுத்த வார கூட்டங்களைப் பற்றி அறிவிப்பு கொடுக்கவும்

பாடம் 2

பராமரிப்பு குழு தலைவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய ஏழு பாடங்கள்

செயல்முறை

பாட்டு 10 நிமிடம்

இணைத்தல் Ice Breaker : ஒவ்வொருவருக்கும் 5 சிறிய தாளைக் கொடுத்து அவர்கள் வாழ்க்கையில் செய்ய விரும்பும் 5 முக்கிய காரியங்களை எழுதச் சொல்லுங்கள். பிறகு 1,2,3,4,5 என்று வரிசைப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரே நேரத்தில் 5ஐயும் நிறைவேற்ற முடியாது. ஒன்றை ஒன்றைத்தான் நிறைவேற்ற முடியும். அதில் முதல் ஏது?

சாட்சி : 10 நிமிடம் கடந்த வாரத்தில் தேவன் செய்த அற்புதங்கள்

ஆரம்ப ஜெபம் : யாராவது ஒருவர்

வேத பாடம் : (25 நிமிடம்)

பராமரிப்பு குழு தலைவர்கள் சபையில் காணப்படும் மற்ற விசுவாசிகளைக் காட்டிலும் ஆவிக்குரிய பெற்றோர் அல்லது மூத்த விசுவாசிகளிடம் காணப்பட வேண்டிய சில குணாதிசயங்கள்.

1. பராமரிப்பு குழு தலைவர்கள் மக்களை நேசிக்கின்றவர்களாக (Compassionate) இருக்க வேண்டும்.
2. பராமரிப்புக்குழு தலைவர்கள் மற்றவர்களுக்காக (Intercessary) பரிந்து மன்றாடி ஜெபிக்க வேண்டும்.
3. பராமரிப்புக்குழு தலைவர்கள் மந்தைக்கு மாதிரிகளாக (Rolemodel) இருக்க வேண்டும்.
4. பராமரிப்பு குழு தலைவர்கள் போதிக்கப்படத்தக்கவர்களாகவும் (Teachable) அதே வேளையில் போதிக்கின்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

5. [illegible] (Listening).

6. [illegible]

7. [illegible]

[illegible]

[illegible]

பாடம் 3

தலைவர்கள் என்பவர் யார்?

செயல்முறை

பாட்டு 10 நிமிடம்

இணைத்தல் Ice Breaker : வேதத்தில் உங்களுக்கு பிடித்த ஒரு தீர்க்கதரிசி யார்? ஏன் அவரை உங்களுக்கு பிடிக்கும்? அவருடைய வாழ்க்கையின் ஒரு சம்பவத்தை சுருக்கமாக ஒவ்வொருவராக கூற அழைக்கலாம்.

சாட்சி : 10 நிமிடம் கடந்த வாரத்தில் தேவன் கொடுத்த சுகம்

ஆரம்ப ஜெபம் : இருவர்

வேத பாடம் : 25 நிமிடம்

தலைவர்கள் பிறக்கின்றார்களா? உருவாக்கப்படுகின்றார்களா?

- குடும்ப பின்னனி
- கல்வி வாய்ப்புகள்
- தேவ திட்டம் (லூக்கா 16: 12)

தலைவர்கள் பலவகை

- சில தலைவர்கள் மற்றவர்களின் ஆலோசனைகளை மதிப்பதில்லை ஏற்றுக் கொள்வதில்லை (Authoritarian).
- சிலர் மக்களையே தீர்மானித்து கொள்ள அனுமதிப்பர் (Laissez - Farie).
- சிலர் சட்டங்கள் மூலம் ஆள்பவர் (Bureaurcratices).
- சிலர் ஜனநாயாக ரீதியாக ஆள்பவர் (Domocratics).

கிறிஸ்தவ தலைவன் யார்?

ஆண்டவர் கொடுத்த திறைமையை, ஆண்டவர் கொடுத்த பொறுப்புகளின் மூலம் மற்றவர்களை கவர்ந்திழுத்து (Influence) தேவனுடைய திட்டம் அவர்களில் நிறைவேற பாடுபடுவான்.

தலைவனின் பத்து கட்டளைகள்

- தேவனுக்கு உண்மையுள்ளவனாக இரு
  Thou shalt be a man of intergrity
- சிறந்த முன் மாதிரியாய் இரு Thou shalt be a model for others
- பிறரின் நல்ல குணங்களையே நோக்கு Thou shalt be an optimistic
- மற்றவர்கள் பேசுவதை கேட்பாயாக. Thous shalt be a good listener
- மற்றவர்களை பாராட்ட தயங்காதே
  Thou shalt be a man of appreciation
- தரிசனமுள்ள மகனாக வாழு Thou shalt be a man of vision
- செயலாக்கமுள்ள மகனாக இரு Thous shalt be amn of action
- மக்களோடு இணைந்து பணியாற்று
  Thou shalt be man work with the crew
- பிரச்சினைகளை கண்டு பயந்து ஓடாதே
  Thou shalt be man of resilency
- நல்ல தகவல் தொடர்பாளனாக இரு
  Thou shalt be a good communicator

முடிவு ஜெபம்

நாட்டின் ஒற்றுமைக்காகவும் தேசத்தலைவர்களுக்காகவும் ஜெபிக்கவும்.

சிறந்த தலைவர்களை தேர்ந்தெடுத்தலின் வழிகாட்டி

கேள்வித் தாள்

விளக்கம்: 0 – ஒரு போதும் கிடையாது, 1– ஒரு வேளை, 2 –எப்பொழுதாவது, 3– அநேக நேரங்களில், 4 – எல்லா நேரங்களிலும்

எண்.	விபரம்	0	1	2	3	4
1.	சமுதாயத்திலும், சபையிலும் மதிப்பும், மரியாதையும் உண்டு					
2.	தண்ணடக்கம் உள்ளவர்					
3.	எல்லா காலங்களிலும் நல்லவராக காணப்படுகின்றார்					
4.	மக்களிடம் நன்கு பழக தெரிந்தவர்					
5.	பிரச்சினைகளை சமாளிக்கத் தெரிந்தவர்					
6.	ஊழிய உயர்வை விரும்பாதவர்					
7.	ஊழிய தரிசனம் நிறைந்தவர்					
8.	மன உளைச்சலிலிருந்து விடுபட தெரிந்தவர்					
9.	எப்பொழுதும் உற்சாகமாய் இருப்பவர்					
10.	மக்களை நன்கு புரிந்து கொண்டவர்					
11.	சொந்த வாழ்வில் அதிக பிரச்சினை இல்லாதவர்					
12.	எவ்வித ஊழிய பொறுப்பையும் ஏற்க தயங்காதவர்					
13.	அடிக்கடி கோபப்படாதவர்					
14.	வாழ்விலும், சபையிலும் புதியனவற்றை ஏற்க தயங்காதவர்					
15.	நல்லொழுக்கம் நிறைந்தவர்					
16.	கிறிஸ்துவில் வளர்ந்து வருபவர்					
17.	ஊழியத்தில் செய்ய வேண்டிய காரியங்களை நன்கு தெரிந்தவர்					
18.	மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்					
19.	மக்களை கவரத்தெரிந்தவர்					
20.	சுயமரியாதை தெரிந்தவர்					
21.	மக்களுக்கு சேவை செய்ய விருப்பமள்ளவர்					
22.	பிரச்சினைகளை கண்டு பயந்து ஓடாமல் அதை சந்திப்பவர்					
23.	மற்றவர்களை ஊழியத்திற்கு உற்சாகப்படுத்துபவர்					
24.	எல்லா காரியங்களிலும் முன்மாதிரியை ஏற்படுத்துபவர்					
25.	வாழ்வில் புதிய காரியங்களை கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்					

[illegible]

90 - 100 [illegible] நிலையில்

80 - 89 நல்ல நிலையில்

70 - 79 வளர்ந்து வரும் நிலையில்

60 - 69 [illegible]

60 [illegible]

கவனித்துக் கேட்டல் - கேள்வித்தாள்

விபரங்கள்	2 நல்லது	1 சுமாராக	0 இல்லை
1. என்னிடம் குறைகளை சொல்ல யாரேனும் வந்தவுடன் என் மேசை மீதுள்ள வேலை செய்து கொண்டிருந்த காகிதங்களை ஒதுக்கி வைத்து கேட்பதற்கு ஆயத்தமாவேன்.			
2. என்னிடம் பேச வந்தவரின் பேச்சு அதிக நேரம் தொடருமானால், தண்ணீர், காபி போன்ற பானங்களை பகிர்ந்து கொள்வேன்.			
3. குறைகளை பகிர்ந்து கொள்ள வந்தவருக்கு நேராக உட்கார்ந்து கவனித்து கேட்பேன்.			
4. குறைகளை சொல்லுபவரின் முகபாவனைகளையும், குரலின் ஏற்ற இறக்கங்களையும் உன்னிப்பாக கவனித்துக் கேட்டு அவரின் பிரச்சினைகளை சரியாய் புரிந்துக் கொள்வேன்.			
5. சொல்லுபவரின் முகத்தை பார்த்து கவனித்துக் கேட்பேன்.			
6. சொல்லுபவரின் பேச்சு முடியும் வரை நான் எந்த வித எனது தனிப்பட்ட தீர்ப்பையோ முடிவையோ சொல்ல மாட்டேன்.			
7. பேசுபவரின் பேச்சின் தீவிரத்திற்கேற்ப எனது அங்க அசைவுகளை வெளிப்படுத்துவேன். கண் அசைவு, தலையாட்டுதல் போன்றன.			
8. பேச்சு இடைபடாவண்ணம் டெலிபோனை தவிர்ப்பேன்.			
9. பேசுபவரின் பேச்சு எப்படியிருந்தாலும் நான் எவ்வித உணர்வுமின்றி உட்கார்ந்திருப்பேன்.			
10. பேசுபவரின் பேச்சுகளை விளக்கமாக எழுதாதபடி, குறிப்புகளை சிறிய தாளில் எழுதுவேன்.			
11. பேச்சில் ஊடே குறுக்கிட்டு என் கருத்துகளை கூறுவேன்.			

விபரங்கள்	2 நல்லது	1 சுமாராக	0 இல்லை
12. பேசுபவரின் பேச்சினை புரிந்து கொள்வதற்காக சில கேள்விகளை கேட்டு புரிந்து கொள்வேன்.			
13. பேசுபவர் திறமையாக கரத்தை விளக்க முடியாமல் போகும்போது எனது வருத்தத்தை தெரிவிக்கமாட்டேன்.			
14. குறைகளை கூறுபவரின் பெயரினை எனது பேச்சினுடே பயன்படுத்துவேன்.			
15. பேசுபவர் பேச்சினுடே உணர்ச்சி வசப்படும் போது சற்று இளைப்பாறி பேசும்படி கூறுவேன்.			
16. பேசுபவரின் உடல் அசைவுகளையும், குரலையும் உற்று கவனிப்பேன்.			
17. பேசுபவரின் உணர்வுகளை நானும் கேட்கும்போது பிரதிபலிப்பேன்.			
18. பேசுபவர் சில காரியங்களை கூற விரும்பாதபோது அதைச் சொல்ல வற்புறுத்த மாட்டேன்.			
19. நான் எவ்வித உணர்வையும் பேச்சினுடே தெரியப்படுத்த மாட்டேன்.			
20. பேசிக்கொண்டிருக்கும்போது எனது வாட்சையோ பக்கத்திலுள்ள பைலையோ பார்க்கமாட்டேன்.			
21. பேச்பவர் என்னிடம் பகிர்ந்து கொண்டதற்காக நன்றி கூறுவேன்.			
22. பேசுபவர் எனது கருத்தை கேட்கும்போது எவ்வித மறைவின்றி, எனது கருத்தை தெளிவாய் கூறுவேன்.			
23. பேசுவரின் பிரச்சினைக்கு தீர்வு தெரியாதபோது எனக்கு தற்போது தெரியவில்லை, சற்று காலம் கொடுங்கள் என சொல்ல தயங்கமாட்டேன்.			

40 க்கு மேல் மிக சிறந்த தலைவர், 30 -39 திறமையானவர், 30க்கு குறைவானவர்கள் வளர வேண்டும்.

மக்கள் சத்தியத்திற்கு செவிகொடுக்கும் மனநிலை

(Receptivity Scale)

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மனநிலையில் வாழ்கிறான். இந்நிலையில் அவர்கள் தள்ளப்படுவதற்கு அவர்களது வாழ்வில் நிகழும் ஒவ்வொரு சம்பவங்களும் காரணம். இக்காரணங்களின் அடிப்படையில் தான் ஒருவரின் மனநிலை சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும். Holmes Rahe என்ற மனோதத்துவ நிபுனர் கண்டறிந்த மன அழுத்த அளவுகோள்கள்:

	மன அழுத்த சம்பவங்கள்	மதிப்பு
1.	துணையை இழப்போர்	100
2.	விவாகரத்து	73
3.	துணையை பிரிதல்	65
4.	சிறைத்தண்டனை	63
5.	குடும்ப அங்கத்தினர்களை இழத்தல்	63
6.	தனிப்பட்ட சுகவீனம் அல்லது வியாதி	53
7.	திருமணம்	50
8.	வேலையை இழத்தல்	47
9.	திருமண சமரசம்	45
10.	வேலை ஓய்வு	45
11.	குடும்ப அங்கத்தினர்களின் சுகவீனம்	44
12.	கர்ப்ப காலம்	44
13.	உடலுறவு பிரச்சினைகள்	39
14.	வியாபார மாற்றம்	39
15.	பண நஷ்டம்	38
16.	நண்பனை இழக்கக் கொடுத்தல்	37




SMALL GROUP
MINISTRY


A HAND BOOK FOR
SMALL GROUP MINISTRY
They're waiting for you...
....to share Jesus
VIJAYAN CHINNAPPAN